Registered No. M. 5068

# ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப் பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி௵ மார்கழிமீ 6௳ 20—12—1948 ஹிஜ்ரி 1368 ஸபர்மீ 18௳ திங்கட்கிழமை } இதழ் 44

## விஸ்வாஸப் பிரச்னை.

—( ரதன்லால் )—

**ஆ**ங்கில ஆட்சி அகன்ற பிறகு எழுந்த பல பிரச்னைகளில் மிகவும் சிக்கலானது விசுவாசப்பிரச்னை. முஸ்லிம்கள் ஒருநாளும் இந்தியாவிடம் விசுவாசம் கொள்ள முடியாது ஆகையால் அவர்கள் வெளியேறும்படி நிர்ப்பந்திக்கவேண்டுமென்று சிலர் மறைமுகமாகவும் சந்தர்ப்பம் கிடைக்கும்போது நேர்முகமாகவும் பேசிவருகின்றனர்.

பாகிஸ்தானில் ஹிந்துக்கள், காங்கிரஸ் முஸ்லிம்கள் பற்றியும் இப்படித்தான் பேசப்படுகிறது. மத ஆட்சி யென்று சொல்லிக்கொள்வதால் அங்கு சர்க்கார் சார்பிலும் இம்மாதிரியான பிரசாரம் நடக்கின்றது. சர்க்கார்மீது குறை கூறுபவர்களை பிடித்துச் சிறைக்குள் தள்ளுவதற்கு பாகிஸ்தான் சர்க்காருக்கு ஆயுதமாக இருந்து வருவதும் இதே பிரசாரந்தான். இதையே சாக்காக வைத்துக்கொண்டு எல்லைப்புர சர்க்கார் செஞ்சட்டையினர் மட்டுமின்றி ஆயிரக் கணக்கான லீகர்களையும் சிறைக்குள் அடைத்து வைத்திருக்கின்றனர். அதைப்பற்றி 18 ஜூலை 48-ல் அகில பாகிஸ்தான் லீக் கவுன்ஸில் மெம்பர் கான் குலாம் முகமத்கான் ஒரு அறிக்கையும் விடுத்தார்.

"செஞ்சட்டையினர் பாகிஸ்தானை எதிர்க்கவில்லை. மந்திரி சபையையே எதிர்க்கின்றனர். இதை நான் நிச்சயமாகக்கூறுவேன். அவர்களுடைய எதிர்ப்புக்கு லீக் மந்திரிசபையென்பது காரணமல்ல; உதவாக்கரை மந்திரிசபை யென்பதே காரணம். செஞ்சட்டையினர் மட்டுமின்றி பொதுஜனங்களும் நெடுநாளைய லீக் தலைவர்களும் கூட இந்த மந்திரிசபையை எதிர்க்கின்றனர். இன்று கைதுசெய்யப்பட்டிருப்பவர்களில் நூற்றுக்கு எண்பதுபேர் லீகர்களே யாவர். செஞ்சட்டையினர் இருபது பேர்தான். எல்லைப்புர ஜனங்களுக்கு மந்திரிசபைமீது இம்மியும் நம்பிக்கையில்லை. இது சட்ட சபையிலுள்ள இருபத்து நான்கு அங்கத்தினர்களின் மந்திரிசபையாகும் அப்துல்கையூம்கான் அதற்கு பணம்கொடுத்துவருகிறார்."

இந்த அறிக்கையை வெளியிட்ட சில தினங்களுக்குள் பாகிஸ்தானுக்காக தீவிரமாகப் போராடிய கான்குலாம் முகம்மதுகானை எல்லைப்புர சர்க்கார் பாகிஸ்தான் அவிசுவாசி யென்று குற்றஞ்சாட்டி சிறையிலடைத்துவிட்டது இன்றுவரை அவர் சிறையிலிருக்கிறார்.

சர்க்காரின் தான்தோன்றித்தனத்தை கண்டிப்பவர்கள் பாகிஸ்தானில் அவிசுவாசிகளாக கருதப்படுகிறார்களென்பதற்கு இந்த உதாரணம் ஒன்றே போதும். ஜெர்மனியில் ஹிட்லர் கையாண்ட முறை இது தான்.

இந்தியாவில் முஸ்லிம்களை அவிசுவாசிகளென்று சொல்லுவதற்கு கீழ்க்கண்ட காரணங்கள் காட்டப்படுகின்றன.

1. முஸ்லிம்கள் பிரிவினையைக் கோரினார்கள். முஸ்லிம்களின் பெரும்பான்மை அதை ஆதரித்தது.

2. முஸ்லிம்கள் அன்னியநாட்டிலிருந்துவந்தவர்கள் அவர்களுடைய புனித ஸ்தலங்களான மெக்கா, மதீனா அன்னிய நாடுகளிருக்கின்றன. ஆகையால் முஸ்லிம்கள் எப்பொழுதுமே இஸ்லாமிய நாடுகளிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்துவருகின்றனர்.

3. முஸ்லிம் நாடுகளுக்கும் முஸ்லிமல்லாத நாடுகளுக்குமிடையே யுத்தம் நடந்தபோதெல்லாம் முஸ்லிமல்லாத நாடுகளில் வசிக்கும் முஸ்லிம்கள் முஸ்லிம் நாடுகளையே ஆதரிக்கின்றனரென்பதற்கு சரித்திரமே சான்று.

4. முஸ்லிம்களுக் கெதிராக மு லிமல்லாதாருக்கு உதவி செய்யக் கூடாதென்று முஸல்மான்களின் மதம் போதிக்கின்றது. இந்நிலையில் பாகிஸ்தானுடன் யுத்தம் மூண்ட மாத்திரத்தில் இந்தியமுஸ்லிம்கள் பாகிஸ்தானை ஆதரிக்க முற்பட்டுவிடுவர்.

5. இன்றைக்கும் அநேக முஸ்லிம்கள் பாகிஸ்தான், ஹைதராபாத் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்ததாக கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

மேற்கூறிய காரணங்களை ஒவ்வொன்ருக அலசிப்பார்த்து அதிலுள்ள உண்மையை பட்சபாதமற்ற முறையில் பரிசீலிப்போம்.

முஸ்லிம்களில் பெரும்பான்மையோர் இந்தியப் பிரிவினையை கோரியது ஆங்கில ஆட்சியின் உதவியால் அக் கோரிக்கையில் வெற்றியடைந்ததும் வாஸ்தவமே. ஆயினும் பிரிவினை கோரிய குற்றத்திற்காக மட்டும் முஸ்லிம்களை அவிசுவாசிகளென்று தீர்மானித்து வெளியேற்ற வேண்டுமென்று முடிவுசெய்வதாயிருந்தால் சீக்கியஸ்தான், ஹரிஜனஸ்தான் ஆதிவாசிஸ்தான் கோரிய கோடிக்கணக்கான சீக்கியர்கள், ஹரிஜனங்கள், ஆதிவாசிகளை வெளியேற்ற வேண்டியிருக்கும். இந்த கட்சிகள் அன்று முஸ்லிம் லீக்குடன் ஒத்துழைத்தன. சீக்கியர்களின் மாபெருந் தலைவரான மாஸ்டர் தாராசிங் கோஷ்டி 1910-ல் இருந்தே முஸ்லிம் லீக்குடன் பகிரங்கமாக ஒத்துஉழைத்து வந்தது. பாகிஸ்தான் கோரிக்கை நியாயமானதென்றும், அதை தாங்கள் ஆதரிப்பதாகவும் சீக்கிய கலாசாரம் ஹிந்துக்களை விட முஸ்லிம்களையே அதிகமாக ஒத்திருப்பதாகவும் சீக்கியர்கள் முஸலிம்களுடன் சுலபமாக சேர்ந்து வாழ முடியுமென்றும் பிரசாரம் செய்துவந்தனர். இதை பெருவாரியான சீக்கியர்களும் ஆதரித்தனர். கடந்ததேர்தலின்போது 33-ஸ்தானங்களில் 20-ஸ்தானங்களை இவர்கள் கைப்பற்றியதே அதற்குப் போதுவான சான்ருகும். இன்றைக்கும் சீக்கியஸ்தான் கோரிக்கை முடிந்தபாடில்லை. கிழக்கு பஞ்சாபில் ஹிந்துக்கள், ஹரிஜனங்களை பலவந்தமாக சீக்கியர்களாக மதம் மாற்றி சீக்கியர்களின் எண்ணிக்கையை பெருக்கி சீக்கியஸ்தான் ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யப்படுவதாக கோ சுவாமி, கணேச தத்தர் போன்ற நேர்மையுள்ள தலைவர்களும் கூட குறை கூறுகின்ருர்கள்.

சமீப தேர்தல்களில் வெற்றிபெறவில்லையாயினும் ஹரிஜனங்களுக்கு தனித்தொகுதி இருந்த காலத்தில் பாகிஸ்தான் அனுதாபியான அம்பேத்கார் கட்சிக்கே அதிக ஓட்டுகள் கிடைத்து வந்தன. அதிலிருந்துபாகிஸ்தான் ஆதரவாளரைபெரும்பான்மை ஹரிஜனங்கள் ஆதரித்தனரென்பது வெளியாகின்றது. எனவே சீக்கியர்கள் பற்றிய வாதமே ஹரிஜனங்களுக்கும் பொருந்தும்.

பீஹாரில் ஆதிவாசிகளும், சென்னையில் திராவிடர்களும் இதேபோக்கை மேற்கொண்டு பாகிஸ்தான் கோரிக்கை முற்றிலும் நியாயமென்று வாதித்து வந்தனர். ஆதிவாசிகள் தலைவரான ஜயபால் சிங்கும், லீக் தலைவர்களும் ஒருவரையொருவர் ஆதரித்து அறிக்கைகள் பரிமாறிக்கொண்டார்கள். ஆக்ரா, நாகபுரி, பம்பாய் முதலிய இடங்களில் ஜாதி ஹிந்துக்கள் மீது படையெடுத்த ஹரிஜனங்களுக்கு லீக்கர்களின் உதவியும் கிடைத்துவந்தது. இன்றைக்கும் பீஹார் ஒரிஸா மாகாணங்களில் ஆதிவாசிகள் பிரிவினைக்காக கிளர்ச்சி செய்வதை காங்கிரஸ் சர்க்கார் பலத்தினடக்கிவைத்திருப்பதுண் ம.

இன் நிலையில் பாகிஸ்தானை ஆதரித்ததற்காக முஸ்லிம்களனைவரையும் அவிசுவாசிகளென்று தீர்மானித்து வெளியேற்றுவதாயிருந்தால் அன் று பகிரங்கமாய் பாகி தானை ஆதரித்ததுடன் இன் றக்கும்நாட்டைக் கூறுபோட முயலுபவர்களைப்பற்றி என்ன முடிவு செய்வதென்பதே கேள்வி. பாக்கியுள்ள இந்தியாவையும் சின்னபின்னம் செய்ய முயன்று வரும் கட்சிகளையும் முஸ்லிம்களுடன் சேர்த்து ஏன் வெளியேற்றக்கூடாது?

2. மு லிம்களை அன்னியர்களென்று சொல்லுவது தவறு அவர்களுடைய மதம் அன்னிய நாட்டிலிருந்து வந்ததென்பது உண்மையாயினும் இங்குள்ள முஸ்லிம்கள் அன்னியர்களல்ல இந்தியா பாகிஸ்தான் முஸ்லிம்களில், இந்திய ரத்தக் கலப்பில்லாத கண்ணிருள்ளவர்களோ, அல்லது நாலைந்து தலைமுறைக்கு முன் ஹிந்துக்களாக யிருக்காதவர்களோ, ஆயிரத்திற்கு ஒருவர்கூட இருக்க முடியுமாவென்பது சந்தேகந்தான். லட்சக்கணக்கில் வந்து இந்தியர்களுட இரண்டறக்கலந்து வாழும் அன்னியர்களின் ரத்தத்துடன் கலக்காமலிருந்து வரும் ஹிந்துக்கள் எவரென்பதை யாரால் சொல்லமுடியும். இந்நிலையில் முஸ்லிம்களை அன்னியரென்பதும் அவர்களுடைய புனித தலங்கள் அன்னிய நாடுகளிலிருக்கி றனவென்பதும் அடிப்படையிலேயே தவருன வாதமாகும்.

அப்படியானல் பௌத்தர்களின் புனிதஸ்தலங்கள் இந்தியாவில் இருப்பதாலும் பௌத்தமதம் அன்னிய நாட்டு மதமென்ற காரணத்தினலு் சைன, ஜப்பான் திபேத்து, பர்மா, இலங்கை முதலிய நாடுகளிலிருந்து கோடிக்கணக்கான புத்த மதத்தினரை வெளியேற்றி இந்தியாவுக்கு அனுப்பிவிடுவது சரியா? இந்தக்கொள்கையை இங்கிலாந்து ஜெர்மனி முதலிய ஐரோப்பிய

நாடுகளும் ஒப்புக்கொள்வதாயிருந்தால் விரல்விட்டு எண்ணத்தக்க ஒரு சிலரைத் தவிர எல்லோரையும் ஏசுநாதர் பிறந்து தன்னுடைய மதத்தை பரப்பிய பாலஸ்தீனத்துக்கே அனுப்பவேண்டியிருக்கும். இவ்வித எண்ணம் முதல்தரமான பைத்தியக்காரத்தனமாகும்.

தாங்கள்தான் இந்தியாவின் உண்மையான எஜமானர்களென்று ஆதிவாசிகளும், திராவிடர்களும் பாத்தியதை கொண்டாடுகிறார்கள். ஆரியர்களும், அவர்களுடைய தருமமும் வெளியிலிருந்து வந்ததென்பதை லோகமான்யதிலகர், ராமகிருஷ்ண பண்டார்கர் போன்ற பிரசித்திபெற்ற சரித்திர ஆசிரியர்கள்கூட ஒப்புக்கொண்டிருக்கின்றனர். எனவே ஹிந்துக்களிலேயே பெரும்பகுதியினர் இந்தியாவிலிருந்து வெளியேறி மத்திய ஆசியாவுக்கு போகவேண்டிருக்கும். ஆகையால் விஷப்பிரசாரத்திற்கு அடிப்படையாக இருந்துவரும் சுதேசி, விதேசி என்ற பரிபாஷையே நாசகரமானதாகும்.

3. முஸ்லிம்நாடுகளுக்கும், முள்லிமல்லாத நாடுகளுக்குமிடையே யுத்தம் மூண்டபோதெல்லாம் தங்கள் நாட்டுக்கெதிராக முள்லிம்கள் முஸ்லிம் நாடுகளுடன் ஒத்துழைத்து வந்ததாக எப்படிச் சொல்லப்படுகிறதென்பது தெரியவில்லையாயினும் இது உண்மையல்லவென்பது நிச்சயம்.

1914-ல் ஆங்கிலேயருக்கெதிராக துருக்கி ஜெர்மனியுடன் சேர்ந்திருந்தது. அப்பொழுது உலக முஸ்லிம்களால் கௌரவிக் ப்பட்டு வந்த கலீபா துருக்கியிலிருந்து வந்தார். அப்படியிருந்தும் லட்சக்கணக்கான முஸ்லிம்கள் துருக்கிக்கு எதிராக போரில் ஈடுபட்டனர். தங்கள் புனித ஸ்தலங்கள் மீதே குண்டுகளைப் பொழிந்தனர். முஸ்லிம்கள் துருக்கிக்கு எதிராக போர் புரிவதில் மதரீதியான ஆட்சேபனையொன்றுமில்லையென்று இந்திய மௌல்விகளும் பத்வா கொடுத்திருந்தனர். இந்திய முஸ்லிம்கள் வயிற்றுக் கொடுமைக்காக அப்படிச் செய்தார்களென்று ஒருக்கால் சொல்லவும் கூடும். ஆனால் யுத்தம் நடக்கையில் ஆங்கிலேயருடன் சேர்ந்துகொண்டு கலீபாவை எதிர்த்து கிளர்ச்சி செய்த அராபியர்களைக் குறித்து என்ன சொல்ல முடியும்.

இந்தியாவிலும்கூட 1526-ல் பாபர் மேவார் மீது படையெடுத்தபோது சிக்கந்தர்லோடியின் மகனான மகமது லோடியும், சர்தார்ஹஸன்கானும் ராணாவுடன் சேர்ந்து பாபரை எதிர்த்தார்கள். அவர்களுடைய சேனையிலிருந்த ஆயிரக்கணக்கான முஸ்லிம்களில் ஒருவனாவது துரோகம் செய்யவில்லை. வகுப்புவாதத்தை தூண்டுவதற்கு இன்று உபயோகப்பட்டுவரும் சிவாஜி மஹாராஜின் தரைப்படையில் ஹாத்தி, லால், நூர்கான் முதலிய முஸ்லிம் தளபதிகளும், கப்பற்படையில் சும்புல், சித்தி மேஸ்திரி, தௌலத்கான் போன்ற முஸ்லிம் அதிகாரிகளும் கடைசிவரையில் சிவாஜியின் விசுவாசிகளாக இருந்திருக்கின்றனர். அதற்கு மாறாக சிவாஜியை மோசம் செய்துவிட்டு ஔரங்கசீப்புடன் சேர்ந்துகொண்ட ஹிந்துக்களின் பெயர்கள் வேண்டுமானால் கொடுக்கமுடியும். இந்த உண்மைகள் மராட்டிய ஆசிரியர்களே எழுதிய சரித்திரங்களிலிருந்து தெரிய வருகின்றன.

இதைப் போலவே ஏராளமான முஸ்லிம்கள் குரு கோவிந்த சிங்குடனும் இருந்தனர். கோவிந்த சிங்கின் குழந்தைகளை கொலை செய்வது சம்மந்தமாக கேட்கப்பட்டபோது மாலீர்கோட்லாவின் முஸ்லிம் சமஸ்தானாதிபதி எதிர்த்தாரென்றும், ஹிந்து ராஜாக்கள் வற்புறுத்தினார்களென்றும் குழந்தைகளின் உயிரை முஸ்லிம்களே காப்பாற்றினார்களென்றும் சீக்கிய சரித்திர ஆசிரியர்களே எழுதி வைத்திருக்கின்றனர். ஆயினும் இதற்கு நேர் மாறாக பிரசாரம் செய்து இன்று வகுப்புவாதம் தூண்டப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் முஸ்லிம்கள் முஸ்லிமல்லாதாருக்கு எதிராக முஸ்லிம்களுடன் சேர்ந்துகொண்டதாக சரித்திரத்தில் இருக்கலாம். ஹிந்துக்கள் ஹிந்துக்களுக்கு எதிராக மற்றவர்களுடன் சேர்ந்துகொண்ட சம்பவங்களும் சரித்திரத்தில் ஏராளமாக இருக்கின்றன. அதை வைத்துக்கொண்டு முஸ்லிம்களையோ ஹிந்துக்களையோ விஸ்வாஸ மற்றவர்களென்று தீர்மானிக்க முடியாது.

சரித்திரத்தை சரிவர படித்தவர்களுக்கு மஹ்மூது கஜினியின் சேனையில் ஆயிரக்கணக்கான ஹிந்து சிப்பாய்கள் இருந்ததும் திலக் என்ற ஒரு பிராமணன் பிரதம தளபதியாயிருந்ததும் தெரியும். மேலும் 1193 முதல் 1326-வரை டில்லி சிம்மாதனத்தில் ஏறிய 35 பாதுஷாக்களில் 19-பேர் முஸ்லிம்களாலேயே கொல்லப்பட்டனர்; அல்லது கொலை செய்விக்கப்பட்டனர். இதேபோல் பணத்துக்காக ஹிந்துக்கள் பரஸ்பரம் சண்டையிட்டுக்கொண்ட சம்பவங்களும் சரித்திரத்தில் நிறைந்திருக்கின்றன, இன்று சட்ட சபை தேர்தல்களில் பிராமணன், பிராமணரல்லாதான் என்ற பிரச்னைகள் கிளப்பப்படுவதைப் போலவே அந்தக் காலத்திலும் ஜனங்களின் ஆதரவை பெறுவதற்காக ஹிந்துக்கள் மதத்தின் பெயரை உபயோகித்ததுண்டு. முஸ்லிமல்லாதாருக்கு எதிராக முஸ்லிம்கள் என்றுமே முஸ்லிம்களையே ஆதரித்தனரென்று எந்த சரித்திரமும் காட்டவில்லை.

4. முஸ்லிம்கள் முஸ்லிம்களுக்கு எதிராக முஸ்லிமல்லாதாருக்கு உதவி செய்யக்கூடாதென்று இஸ்லாம் போதிப்பதாக சொல்லுவது தவறு மூன்றாவது

குற்றச்சாட்டுக்கு கொடுக்கப்பட்ட பதிலில் இது பூரணமாக தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

5. அநேக முஸ்லிம்கள் பாகிஸ்தான், ஹைதராபாத் பிரசாரம் செய்கையில் கைது செய்யப்பட்டனரென்று சொல்லுவது பாதி உண்மையும் பாதி தவறுமாகும். முஸ்லிம்களை ஒரே யிருட்டில் விட்டு விட்டு லீக் லீடர்கள் போய்விட்டனர். அதனால் ஒன்றும் புரியாமல் முஸ்லிம்கள் ஏதேதோ பேசுகின்றனர். இதே மாதிரியாகத்தான் ராஜபுதன ஜாகீர்தார்கள், பரத்பூர் ஜாட்டுகள், சீக்கியர்களும் பேசுகின்றார்கள், முஸ்லிம்களைப்போலவே இவர்களும் ஒன்றும் புரியாத நிலைமையிலிருக்கின்றனர் தாங்கள்சுதந்திரப்பிரகடனம் செய்தால் ஆங்கிலேயர்களிடமிருந்து என்ன உதவி கிடைக்குமென்று சர்ச்சிலிடம் அடிக்கடி ஓடிய ராஜாக்கள், மஹா ராஜாக்களையும் வெளியேற்றுவதா? பாகிஸ்தானுடன் சேர்ந்து சூழ்ச்சி செய்யப் பார்த்த பல ராஜாக்களையும் வெளியேற்றுவதா ? 15-ஆகஸ்ட் 1947-க்கு முன்பே ஒரு முஸ்லிமை பாகிஸ்தானில் தூதராக நியமித்த திருவாங்கூர் ராஜாவையும் அவரை ஆதரித்தவர்களையும் வெளியேற்றுவதா ? திருவாங்கூர் ராஜாவின் போக்கு குறித்து சந்தோஷம் தெரிவித்து ஆசீர்வதித்த சாவர்க்கார் முதலிய ஹிந்து வகுப்புவாத தலைவர்களை இந்தியாவிலிருந்து வெளியேற்றுவதா ? எல்லையில் திருட்டுத்தனமாக ஜவுளியைக் கடத்தி பாகிஸ்தானுக்கு அனுப்பும்போது பிடிபட்ட நூற்றுக்கு நூறு ஹிந்து, சீக்கியர்களை விஸ்வாஸமற்றவர்களென்று தீர்மானிப்பதா? கிழக்கு பஞ்சாபுக்கு மத்திய சர்க்கார் கொடுத்த ஜவுளியில் நூற்றுக்கு அறுபது பங்கு பாகிஸ்தானுக்கு கடத்தப்பட்டிருப்பதைக் கொண்டு கிழக்கு பஞ்சாப் ஹிந்து, சீக்கியர்களை விஸ்வாஸமற்றவர்களென்று முடிவு செய்வது பொருந்துமா ?

ஹைதராபாத்தில் நடந்ததும் இதுதான். ரஸாக்கர்களுடன் சேர்ந்துகொண்டு காஸிம் ரஸ்வியை கிருஷ்ண பரமாத்மா வென்று வாழ்த்தி கொடுமை செய்த ஆயிரக்கணக்கான ஹிந்துக்களுமுண்டு அதே சமயத்தில் உயிருக்குத் துணிந்து ரஸாக்கர் நடவடிக்கைகளை எதிர்த்துவந்த ஆயிரக்கணக்கான முஸ்லிம்களும் உண்டு. இந்தியாவை ஆதரித்து எழுதினால் கொல்லப்படுவாயென்று வந்த பயமுறுத்தல்களை லட்சியம் செய்யாமல் உண்மையை எழுதி வீரத்துடன் உயிரிழந்த 'இப்ரோஸ்' பத்திரிகை ஆசிரியர் ஷோஅய்புல்லாகானும் ஹைதராபாத் வாசிதான். காஷ்மீரில் மக்பூல் அஹ்மது ஷேர்வானி இதே விதமாக உயிரை அர்ப்பணித்தார். இதே காரணங்களுக்காக சிந்துவில் அல்லாபக்ஷ் கொலைசெய்யப்பட்டார். எல்லைப்புரத்தில் கான் சகோதரர்களும் குதாயீகித்மத்கார்களும் தங்களுடைய உயிரை பணயம்வைத்து ஆயிரக்கணக்கான ஹிந்து, சீக்கியர்களின் உயிரைக் காப்பாற்றிய வீரச்செயல்களை எல்லைப்புரத்திலிருந்து வந்திருக்கும் ஒவ்வொரு அகதியின் வாயினாலும் கேட்கலாம்.

இதற்குமாறாக எல்லைப்புரம், ஸிந்து முதலிய இதர பாகிஸ்தான் மாகாணங்களில் குதாயீகித்மத்கார்களுக்கும், காங்கிரஸுக்கும் எதிராக முஸ்லிம் லீகை ஆதரித்த ஹிந்து, சீக்கியர்களும் இருக்கத்தான் செய்தார்கள். இன்றுவரை ஹைதராபாத்தில் ராஜா மஹ்பூப்கிரன் ராஜா கிர்ஷனின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் போன்ற பெரியபெரிய ஹிந்து ஜாகீர்தார்கள் இந்தியாவுக்கெதிராக நிஜாமை ஆதரித்துவந்தனர். நிஜாம் இந்தியாவில் சேர்ந்தால் தங்களுடைய ஜமீந்தாரித்துவத்துக்கு ஆபத்து வந்துவிடுமென்ற பயமே அதற்குக் காரணம் மேலும் பம்பாய், ஷோலாப்பூர், சென்னை மாகாணம் முதலிய இடங்களில் நிஜாமுக்கு உதவி செய்வதில் ஈடுபட்டிருந்த ஹிந்துக்கள், சேட்டுக்கள் பிடிபட்டிருக்கின்றனர். அதற்காக ஹிந்துக்கள் அனைவரையும் விசுவாசமற்றவர்களென்று நினைப்பது நியாயமாகுமா ?

நூற்றுக்கு நூறு ஹிந்துக்களைக் கொண்ட ஸ்தாபனங்கள் இன்று இந்தியாவில் பாகிஸ்தானுக்கு சாதகமாக பிரசாரம் செய்து வருகின்றன. ஸ்ரீநகரை நெருங்கி வந்திருந்த மலைஜாதியினரை விரட்டியடித்து காஷ்மீர் பள்ளத்தாக்கையும், ஜம்மு பிரதேசத்தையும் மீட்டியிருப்பினும் காஷ்மீரில் இந்திய ராணுவம் தோல்வியடைந்து வருவதாக பிரசாரம் செய்கின்றன. இதனால் பாகிஸ்தானுக்கே லாபம் காஷ்மீர்மஹாராஜாவும் ஷேக்அப்துல்லாவும் எத்தனையோ முறை மறுத்தும் இருவருக்கும் ஒத்துவருவதில்லையென்று இவர்கள் கதைப்பது நின்றபாடில்லை. பாகிஸ்தானும் இதைத்தான் சொல்லுகின்றது. இந்திய சர்க்காருக்கு பலமில்லையென்று இவர்களும் சொல்லுகின்றனர். பாகிஸ்தானும் இரவு பகல் 24 மணி நேரமும் ஓயாமல் சொல்லுகிறது. இந்தியாவில் ஹிந்து முஸ்லிம் கலவரங்களை மூட்டிவிட இந்த ஸ்தாபனங்களும் முயலுகின்றன இந்திய சர்க்கார் தன் சக்தி பூராவையும் தங்களுக்கெதிராக ஈடுபடுத்த முடியாமலிருப்பதற்கு இந்தியாவில் கலவரங்கள் நடக்க வேண்டுமென்றே நிஜாமும் பாகிஸ்தானும் விரும்பின. இவ்விதமாக தெரிந்தோ தெரியாமலோ ஹிந்துக்களின் ஸ்தாபனங்கள் பாகிஸ்தானுக்கு ஐந்தாம்படை வேலை செய்வதால் ஹிந்துக்களனைவரையும் அவிஸ்வாசிகளென்று சொல்லிவிட முடியுமா ?

இந்திய முஸ்லிம்களின் விஸ்வாசத்தை சந்தேகிப்பதற்கு சொல்லப்படும் காரணங்கள் ஆத்தமற்றவை.

இருந்தாலும் உணர்ச்சி வெறுப்பு காரணமாக, தர்மத்தின் பெயரால் ஆணையிட்டுச் சொல்லுவதால் சாதாரண அறிவு படைத்த வாலிபர்களும் ஜனங்களும் அதை சுலபமாக நம்பிவிடுகின்றனர். யூதர்களுக்கும் ஜெர்மன் சர்க்காருக்கும் எதிராக ஹிட்லரும் முஸோலினியும் இப்படித்தான் வெறுப்பூட்டினார்கள். சில தினங்கள் வரை ஜனங்களைத் தூண்டிவிட முடிந்ததாயினும் முடிவில் தாங்கள் வீழ்ந்ததுடன் ஜெர்மனி, இத்தாலி நாடுகளையும் பாழாக்கிவிட்டார்கள். வெறுப்பை அடிப்படையாகக் காண் பலம் திரட்டப்பட்டதே அவர்களுடைய தோல்விக்குக் காரணம்.

உதாரணத்துக்கு ரஷ்யாவை எடுத்துக்கொள்ளலாம். அங்கு இந்தியாவைக் காட்டிலும் அதிகமாக ஜாதிகளிருக்கின்றன. இந்திய முஸ்லிம்களைப்போலவே மெக்கா, மதீனாவை தங்கள் புனித ஸ்தலங்களாகப் பாவிக்கும் பலகோடி முஸ்லிம்களும் இருக்கின்றனர். ஆயினும் ரஷ்யாவில் இம்மாதிரி விஸ்வாஸப்பிரச்சனை எழுவதேயில்லை. இந்திய எல்லையில் ஆப்கனிஸ்தானம், ஈரான் முதலிய நாடுகள் இருப்பதைப் போலவே நூற்றுக்கு நூறு முஸ்லிம்களைக்கொண்ட சில மாகாணங்கள் ரஷ்ய எல்லையிலுமிருக்கின்றன. அண்டையிலுள்ள முஸ்லிம்களுடன் சேர்ந்துகொண்டு ரஷ்யா மீது படையெடுத்தால் என்ன செய்வதென்ற கவலை, இந்தியாவின் ஹிந்து வகுப்புவாததலைவர்களைப்போல், ரஷ்யர்களுக்குஏற்படுவதில்லை.

தங்கள் சுகபோக ஆடம்பரங்களை காத்துக்கொள்வதற்கு மக்களிடையே வகுப்பு வேற்றுமையைத் தூண்டிவிடும் ராஜாக்கள், மஹா ராஜாக்கள், முதலாளிகள் ரஷ்யாவில்லாமலிருப்பதே அதற்குக் காரணம். அதன் பயனாக ஒரு முறை தோல்வியைக் கண்டதும் சரணாகதியடைந்துவிட்ட ஜெர்மன், இத்தாலிய ராணுவத்துக்கு மாறாக ரஷ்யராணுவம் ஒவ்வொருகட்டடத்துக்காக மூர்த்தண்யமாகப் போரிட முடிந்ததுடன் இன்று உலகத்தையே ஆட்டிவைக்கும் நிலைமையில் ரஷ்யா இருந்தும் வருகிறது.

ரஷ்யாவை உதாரணமாக வைத்து இந்தியாவிலுள்ள ஹிந்துக்களாகிய நாம் விழிப்படைவோமா? வகுப்புவாதம் எவ்வளவு நாசகரமானதென்பதை முஸ்லிம் சகோதரர்கள் உணருவார்களா? வகுப்பு வேற்றுமை ஒழிந்தபிறகு ரஷ்யாவிலும், சைனாவிலும் முஸ்லிம்கள் இருந்துவரும் அதே நிலையை இந்திய முஸ்லிம்களும் அடைய முடியுமென்பதை தெரிந்து கொள்வார்களா? அங்கெல்லாம் முஸ்லிம் அல்லாதார் பெரும்பான்மையாக விரும்பினும் தனித்தொகுதி தேர்தல் முறையின் அவசியம் முஸ்லிம்களுக்கு ஏற்படுவதில்லை. அந்த நாட்டு சர்க்கார்கள் முஸ்லிம்களிடம் விசுவாசம் கோருவதுமில்லை. முஸ்லிம் நாடுகளிலுள்ள முஸ்லிமல்லாதாரும் இப்படிதான் இருந்து வருகின்றனர். உதாரணமாக எகிப்து ஒரு முஸ்லிம்நாடு. இந்தியாவில் முஸ்லிம்கள் இருப்பதைபோலவே அங்கு கிருஸ்தவர்கள் இருக்கின்றனர். எகிப்தில் சுதந்திரப் பிரச்னை எழுந்தபோது இந்தியாவில் முஸ்லிம் பிரச்னையைக் கிளப்பிவிட்டதைப்போலவே அங்கும் வெள்ளையர்கள் கிருஸ்தவர்கள் பிரச்னையை கிளப்பிவிட்டனர். எகிப்தின் தலை சிறந்த தலைவர் ஜாக்லூல்பாஷா கோரிக்கைகளை எழுதிக்கொடுக்கும்படி கிருஸ்தவர்களைக் கேட்டுக்கொண்டார்.

கிருஸ்துவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை எழுதிக்கொடுத்தனர். அதில் தன் சார்பாக இரண்டு கோரிக்கைகளையும் சேர்த்து ஜாக்லூல்பாஷா அப்படியே ஏற்றுக்கொண்டார். அதைக்கண்ட கிருஸ்தவர்கள் கோரிக்கைகளை கிழித்து எறிந்துவிட்டு நிபந்தனையற்ற முறையில் முஸ்லிம்களுடன் சுதந்திரப் போராட்டத்தில் சேர்ந்து கொண்டார்கள்.

இந்தியாவில் மஹாத்மா காந்திஜியும் அதையே செய்யவிரும்பினர். முஸ்லிம்களுக்கு வெத்துக்கடுதாசியில் கையெழுத்துப்போட்டுக் கொடுப்பதாக அறிவித்தார். ஒருபுரம் ஹிந்துக்களின் எதிர்ப்பை அவர் சமாளிக்கவேண்டியிருந்தது. இன்னொருபுரம் முஸ்லிம்களின் கோரிக்கைகளைவிட அதிகமாகக் கொடுப்பதாக வாக்களித்து-வெள்ளையர்கள் முஸ்லிம்களைத் தூண்டிவிட ஆரம்பித்துவிட்டனர். சில லட்சம் முஸ்லிம்கள் மட்டுமே காந்திஜியை ஆதரித்தனர். அன்று ஹிந்துக்களோ அல்லது முஸ்லிம்களோ உண்மையை உணர்ந்து நடந்துகொண்டிருந்தால்....!

நடந்தது நடந்தேறிவிட்டது. பாகிஸ்தானும் அமைந்துவிட்டது, அதனால் ஹிந்துக்களுக்கு ஏற்பட்ட நஷ்டமென்ன? முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட நஷ்டமெவ்வளவு? யென்று ஆற அமர அலசிப்பார்த்தால் உண்மை முற்றிலும் வேறென்பது விளங்கும். இந்திய முஸ்லிம்கள் சகோதரர்களாய் நடத்தப்பட்டு அதில் முஸ்லிம்களும் ஒத்துழைப்பதாயிருந்தால் பாகிஸ்தான் எத்தனை நாளைக்கு நிலைக்குமென்று சுலபமாய்ச் சொல்லிவிடலாம். பாகிஸ்தான், ஆப்கனிஸ்தானிடையே நிலவும் விரோதமனப்பான்மை, பாகிஸ்தான் விஷயத்தில் பட்டாணியர்களின் போக்கு, பாகிஸ்தான் உணர்ச்சி, கோபம், அவசரம் காரணமாக செய்யப்பட்ட முடிவென்பதையே காட்டுகிறது. அதற்காகக் கோடிக்கான முஸ்லிம்கள் இன்றைக்கும் வருந்துகின்றனர். இனியும் வருந்தப் போகின்றனர். பாகிஸ்தானில் முஸ்லிம் அகதிகள் நடத்தப்படும்விதமே பாகிஸ்தான் பொருளாதார நிலைமையை எடுத்துக் காட்டுகின்றது. ஆகையால் இஸ்லாமின் பெயரைச் சொல்லி முஸ்லிம் நாடுகளிடம் உதவி பெற்று பொரு

# ஆர். எஸ். எஸ். ஸ்தாபகருக்கு ஹிட்லர் ஆலோசனை

(o)

## இந்தியாவில் நாஜிஸம்.

டெல்லி டிச. 1. வார்டு காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி வெளியிட்டிருக்கும் 'எச்சரிக்கை' என்ற பிரசுரத்தில் ராஷ்டிரீய சுயம் சேவக் சங்கத்தின் நோக்கங்களையும் உண்மை சொரூபத்தையும் எடுத்துக்காட்டியிருக்கிறார். அதை அப்படியே சமர்ப்பிக்கிறோம். —ஆசிரியர்.

நண்பர்களே! ராஷ்டிரீய சுயம் சேவக் சங்கத்தினால் வெளியிடப்பட்ட 'நவேதன்' என்ற பிரசுரத்தைக் கண்டேன். பாட்டியாலாவின் எதோவொரு இடத்தில் இப்பிரசுரம் அச்சிடப்பட்டிருக்கிறது. இதை கூர்ந்து படித்தேன். சங்கத்தை நான் நன்கு அறிவேன். 1941, 1942; வருஷங்களில் சங்கத்தின் அங்கத்தினனாயிருந்தேன். ஆகையால் சங்கத்தின் அந்தரங்க, பஹிரங்க நடவடிக்கைகள் சந்தேகத்திற்கு இடமின்றி எனக்குத்தெரியும். சங்கத்தின் அறிக்கைகள் நோக்கங்கள், தத்துவங்கள் நன்றாக அறிந்திருக்கிறேன். 1946-க்குப் பிறகு சங்கத்தின் நடவடிக்கைகளை ஊன்றிக் கவனித்திருக்கிறேன். ஆகையால் அதன் அந்தரங்கத்தையும் ரகசியங்களையும் பொது மக்களுக்கும், சர்க்காருக்கும் அறிவிப்பதற்கு அதனுடைய துரோகத்தையும் உண்மையான சொரூபத்தையும் எடுத்துக் காட்ட இப் பிரசுரத்தை வெளியிடுவது என் கடமை.

1925-ல் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் தலைமைக் காரியாலயம் நாகபுரியில் அமைக்கப்பட்டது. எனக்குத் தெரிந்தவரை ஜெர்மனிக்குச்சென்று சங்க ஸ்தாபகர் ஹிட்லரை சந்தித்தார். "வகுப்புக் கலவரங்கள் பெருமளவில் மூண்டாலன்றி இந்தியா விடுதலை பெற முடியாது." என்று ஹிட்லர் சங்க ஸ்தாபகருக்கு ஆலோசனை கூறினார் (அதுவரை சங்க ஸ்தாபகர் காங்கிரஸ் அங்கத்தினராக இருந்தார். காங்கிரஸின் போக்குப் பிடிக்காமல் காங்கிரஸைவிட்டு வெளியேறினர்.) ஜெர்மனியில் தங்கி யிருந்தபோது நாஜி முறைகளை கற்றுக்கொண்டார். (சங்க ஸ்தாபகரைப் பற்றிய விபரங்கள் ஹிட்லரின் சுய சரித்திரத்திலும் காண முடியும்.) இந்தியாவுக்கு திரும்பி வந்தபோது அவருடைய சிந்தனையில் கீழ்வரும் மூன்று நோக்கங்கள் இருந்தன.

1. யூதர்களை ஜெர்மனியிலிருந்து வெளியேற்ற நாஜிக்கட்சி கையாண்ட முறைகள்.

2. ஒவ்வொரு ஹிந்துவுக்கும் ரகசிய ராணுவ பயிற்சி யளிக்கவேண்டிய அவசியம்.

3 வாலிபத்தில் புகுத்தப்பட்ட எண்ணங்கள் நீடித்திருக்குமென்ற மனோ தத்துவ சாஸ்திரிகளின் முடிவை யொட்டி பாலர்களையும் வாலிபர்களையும் வசப்படுத்துவது.

---

ளாதார வரட்சியைப் போக்கிக்கொள்ள பாகிஸ்தான் முயலுகின்றது. பாகிஸ்தானில் இஸ்லாமிய ஆட்சி இருந்தாலும் இருக்காவிட்டாலும் இந்தியா எல்லா மதத்தினருக்கும் பொதுவான மத அடிப்படையற்ற நாடாகத்தான் இருக்குமென்று அறிவித்ததன் மூலம் பாகிஸ்தானின் முயற்சி பலனற்றுப் போகும்படி இந்திய சர்க்கார் செய்திருக்கிறது. இஸ்லாமிய நாட்டு மக்களை கிளப்பிவிட்டு பாகிஸ்தானுக்கு உதவி செய்யும்படி தங்கள் சர்க்கார்களை நிர்ப்பந்திக்கும்படி செய்ய இந்திய முஸ்லிம்களைக் கொடுமைப்படுத்தப் படுகின்றனரென்ற பிரசாரத்தைக் குறிப்பாக முஸ்லிம் நாடுகளில் பாகிஸ்தான் செய்துவருகிறது. முஸ்லிம் ஸ்தானீகர்களை அனுப்பி இந்தியமுஸ்லிம்கள்பாதுகாப்புடனிருப்பதாக எடுத்துச் சொல்லி இந்திய சர்க்கார் பாகிஸ்தான் பொய்ப் பிரசாரத்தை அம்பலப்படுத்த விரும்புகின்றது அதற்கு முஸ்லிம்களுக்கெதிராக வெறுப்பைத் தூண்டிவிடும் ஹிந்துஸ்தாபனங்களும், இன்னுங்கூட விழிப்படையாமலிருக்கும் முஸ்லிம்களும் முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றனர்; இந்நிலையில் இருவருமே நிலைமையை சரிவர புரிந்து கொள்ளவேண்டியதவசியம். பாகிஸ்தானில் என்னதான் நடந்தபோதிலும் இந்திய முஸ்லிம்களின் உயிர், பொருள், கௌரவம் பூரணமாகப் பாதுகாக்கப்படுமென்று ஹிந்துக்கள் முஸ்லிம்களுக்கு நம்பிக்கையூட்ட வேண்டும். ஹிந்துக்கள் எப்படித்தான் நடந்துகொண்டாலும் இந்தியாவிடம் பூரண விசுவாசத்துடன் நடந்து கொள்ளுவோமென்று முஸ்லிம்கள் தெளிவு படுத்தவேண்டும். இதைத் தவிர இந்திய நலனுக்கும் ஹிந்து, முஸ்லிம்களின் தர்மங்களின் கௌரவத்தைக் காப்பதற்கும், உயர்த்துவதற்கும் வேறு உபாயமேயில்லை.

ஆயினும் வகுப்புவாத உணர்ச்சியுள்ள பிடிவாதக்கார தலைவர்களால் தூண்டப்பட்ட ஹிந்து முஸ்லிம்களில் எத்தனைபேர் என்னுடைய குரலுக்கு செவி சாய்க்கப் போகின்றனரென்று சொல்லுவதற்கில்லை.

மேற்கூறிய மூன்று நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ரா. சு. சே. சங்கம் இந்தியாவில் தோன்றிற்று

1946 வரை சங்கத்தின் எல்லா நடவடிக்கைகளும் ரகசியமாகவே இருந்துவந்தன. சங்கத்துக்கு வெளியே சங்கத்தைப் பற்றி ஒருவரிடமும் பேசக்கூடாதென்றும் சங்கத்தில் கொடுக்கப்படும் பயிற்சி வெளியாருக்குத் தெரியாமலிருக்க வேண்டுமென்றும் அங்கத்தினர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டிருந்தார்கள். வருடம் இருமுறை பல்வேறு இடங்களில் சங்கத்தின் பயிற்சி முகாம்களில் பயிற்சி அளிக்கப்படும். நாற்பது நாள் பயிற்சிக்கு ஓ. டி. ஸி. என்றும் எழு நாள் பயிற்சிக்கு ஐ. டி. ஸி. என்றும் பெயர். பயிற்சி முகாம்களில் ஹிந்து வாலிபர்களுக்கு ராணுவ பயிற்சியும் கத்தி, கட்டாரி, ஈட்டி, தடி முதலிய ஆயுதங்களைக் கொண்டு சண்டை செய்யும் முறைகளும் கற்றுக் கொடுக்கப்பட்டன. அத்துடன் பயிற்சி முகாம்களில் கௌரவ, பாண்டவ யுத்தம் நடத்துவதன் மூலமும் பயிற்சியளிக்கப்பட்டது

பயிற்சி முகாம்கள் பெரும்பாலும் மறைவான ரகசியமான இடங்களில்தான் ஏற்படுத்தப்பட்டன. வாலிபர்களுக்கும் பாலர்களுக்கும் சதா வகுப்புவாத விஷம் ஊட்டப்பட்டு வந்தது. சிவாஜி மீது ஔரங்கசீப்பி ளான ஜயபுன்னிஸாவின் காதல், செஞ்சல் குமாரியின் வரலாறு, சிவாஜி பைராகி, குரு கோவிந்தசிங்ஜி, மஹாராணாபிரதாப் முதலியவர்களைப் பற்றிய கட்டுக்கதைகள் அவர்களுக்குப் போதிக்கப்பட்டு வந்தன. முஸல்மான்கள் ஹிந்துக்களை சொல்லொணாத் துன்பங்களுக்காளாக்கினார்கள் என்று கதைத்து வாலிபர்களின் உள்ளங்களைக் கெடுத்து வகுப்புவாத மயக்க மருந்தைக் கொடுத்துவந்தார்கள்.

அதன் பயனாக முஸ்லிம் என்று கேட்ட மாத்திரத்தில் சேவக சங்கத்தைச் சேர்ந்த வாலிபர்கள் ஆத்திரமும் வெறுப்பும் கொள்வதை இன்று கண்கூடாகப் பார்க்கிறோம். சங்கத்தின் எல்லா நடவடிக்கைகளும் அந்தரங்கமாகவே நடக்கும். உத்திரவுகளும் சுற்றறிக்கைகளும் வாய் மூலமாகவே வெளிவரும். உத்திரவுகளையும், சுற்றறிக்கைகளையும் இன்னார் இன்னாருக்கு தெரியப்படுத்த வேண்டுமென்று சங்க சேவகர்கள் நியமிக்கப்படுவர்.

சங்க அங்கத்தினர்கள் எந்த ஒரு அரசியல் கட்சியிலும், குறிப்பாக காங்கிரஸிலும் சேரக்கூடாதென்று தடை செய்யப்பட்டனர். ஆனால் ஹிந்துமகாசபை போன்ற வகுப்புவாத ஹிந்து மத ஸ்தாபனங்களில் கலந்துகொள்ளவேண்டுமென்று கட்டளையிடப்பட்டனர். டில்லி தேர்தலின்போது புரொபஸர் ஸிங் சார்பில் சேவக் சங்க தொண்டர்கள் பிரசார வேலையில் ஈடுபட்டிருந்தது அனைவருக்கும் தெரியும்.

கடைசியாக சங்க நடவடிக்கைகள் அனைத்தும் பாஸிஸ முறையிலேயே இருந்தன. ஹிந்துக்களுக்கு பிரதிநிதித்துவம் வகிப்பதாக நினைத்து பாஸிஸ முறைகளை எதிர்த்தவர்கள் விஷயத்தில் பலாத்காரம் உபயோகிக்கப்பட்டது. 1947-ல் நடந்த ஹிந்து முஸ்லிம் கலவரங்கள் திட்டம் போட்டு நடந்ததை நாம் பார்த்தோம். அது ரா. சு. சே. சங்கம் வகுத்த திட்டமென்பதையும் நாம் அறிவோம். டில்லி அமைதியாயிருந்தபோதே முஸ்லிம்கள் சண்டை செய்யத் தயாராய் இருக்கிறார்களென்றும் ஹிந்துக்களை அழித்துவிடுவார்களென்றும் சங்கத்தினர் தவறான பிரசாரம் செய்தது அனைவருக்கும் தெரியும். அதை எதிர்த்துப் பிரசாரம் செய்த ஹிந்து சமாதானப்பிரியர்கள் பலாத்காரத்துக்கு ஆளானார்கள். அவர்கள் தங்களுடைய வீடுகளில் இருந்துவருவதற்கும் முடியாமல்போயிற்று. கலவரங்களின் போது குண்டர்களின் முன்னணியில் துப்பாக்கி முதலிய பயங்கர ஆயுதங்களுடன் சங்க ஊழியர்கள் காட்சியளித்ததை கண்டோம். சிப்பாய்களைப்போல் காக்கிஉடை தரித்து முஸ்லிம் பிரதேசங்களை சங்க ஊழியர்கள் சுற்றிவளைத்துக் கொண்டதும் எல்லோருக்கும் தெரியும். பெருமளவில் இவர்களிடம் ஆயுதங்கள் எக்கிருந்து வந்தன என்று நினைக்கும் போது நமக்கு ஆச்சரியமாயிருக்கின்றது. ரஜபுத்திர சமஸ்தானங்களிலிருந்து ஆயுதங்கள் கிடைத்துவந்தனவென்று இப்பொழுதுதான் தெரியவருகிறது இந்திய விடுதலைக்குப்பிறகு தேசீயத் தலைவர்களையும் குறிப்பாக மகாத்மா காந்திஜியையும் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் பகிரங்கமாக திட்டிக் கொண்டிருந்ததை மக்கள் கேட்டிருக்கின்றனர்.

ஆகஸ்ட் 15-ந்தேதி டில்லியின் ஒரு தெருவில் மூவர்ணக்கொடி ஏற்றப்படவிருந்ததை எதிர்த்து கலகம் செய்யப் போவதாக பயமுறுத்தி சங்க ஊழியர்கள் அங்கு ஹிந்து ராஷ்டிரீயக்கொடி ஏற்றிவைக்கப்போவதாகச் சொன்னார்கள் போலீஸ் உதவியுடன் காங்கிரஸ்காரர்கள் மூவர்ணக் கொடியை ஏற்றவேண்டியிருந்தது

காந்திஜி கொல்லப்பட்ட சேதியைக்கேட்டு சந்தோஷத்தால் பூரிப்படைந்த சங்கத்தினரை கண்ணாரக் கண்டிருக்கிறோம். 1948 பிப்ரவரி மீ 2-ந்தேதி அவர்களுக்குள் இனிப்புப் பண்டங்கள் வழங்கப்பட்டன. இந்த நடவடிக்கைகளை யெல்லாம் கண்டபிறகும் ராஷ்டிரீய சுயம் சேவக் சங்கத்தை ஒரு பாஸிஸ்ட் ரகசிய ராணுவமென்று சொல்லாமலிருக்க முடியாது. சங்கத்தைச் சேர்ந்தவர்கள் பாஸிஸ முறைகளை பின்

(9-பக்கம் பார்க்க.)

# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 20—12—'48 திங்கட்கிழமை { இதழ் 44


## ஆர். எஸ். எஸ். சத்தியாக்கிரஹம்

சத்தியாக்கிரஹத்துக்கு சத்தியமும் அஹிம்ஸையுமே அடிப்படை. அரசியலில் அஹிம்ஸையைப் புகுத்திய காந்தி மஹான் சுதந்திர போராட்ட வீரர்களுக்கு அளித்த ஆயுதமே சத்தியாக்கிரஹம் சத்தியத்திற்கு புரம்பான காரியங்களில் சத்தியாக்கிரஹத்தால் வெற்றி காணமுடியாது சத்தியாக்கிரஹத்தை துஷ்பிரயோகம் செய்வது வெறுக்கத்தகுந்த செய்கை. சத்தியசீலரான காந்திஜி சுட்டுக்கொல்லப்பட்டாரென்ற செய்தி கேட்டதும் மிட்டாய் வழங்கிய சதிகாரக் கூட்டம் இன்று சத்தியாக்கிரஹம் ஆரம்பித்திருக்கிறது. காந்திஜியின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமானவர்கள் நடத்துவது ராவண ராஜ்ஜியமாம்! ராமராஜ்ஜியம் என்ற எண்ணத்துக்கே உற்பத்திஸ்தானமாக இருந்த உத்தமரின் மறைவை உற்சாகத்துடன் கொண்டாடியவர்கள் ராமராஜ்யத்தை ஏற்படுத்தப் போகிறார்களாம்! காந்தீய மூலாம் பூசினாலன்றி இந்தியர்களின் ஆதரவை பெறமுடியாதென்பதையுணர்ந்து ராமராஜ்ஜியமென்றும், சத்தியாக்கிரஹமென்றும் சொல்லிக்கொண்டு பலாத்கார நடவடிக்கைகளிலிறங்கியிருக்கின்றனர் அதனால் இந்தியர்கள் ஏமார்ந்துவிடப்போவதில்லையென்பது நிச்சயம்.

ராஷ்டிரீயர்கள் பாஸீஸத்தில் நம்பிக்கைக்கொண்டவர்கள். தங்களுடைய உண்மையான சொரூபம் வெளியில் தெரியாமலிருக்க வகுப்புவாதப்போர்வை போர்த்திக்கொண்டிருக்கின்றனர். அவர்களுடைய லட்சியம் ஹிந்து ராஜ்யமல்ல; ராமராஜ்ஜியமுமல்ல; பாஸிஸ்ட் ராஜ்யமேயாகும். ஹிந்து ராஜ்ய கோஷத்தால் ஹிந்துக்கள் மயங்கத் தயாராயில்லை. பாஸிஸ்ட் ராஜ்யங்களுக்கு இன்றைய உலகத்தில் இடமில்லையென்று அவர்களுக்குத் தெரியும். சென்ற யுத்தத்தில் பாஸிஸ்ட் நாடுகள் அடைந்த கதியை இந்தியர்கள் பார்த்திருக்கின்றனர். மேலும் தங்களுக்கு நன்மை பயக்கக்கூடிய ஒரு ராஜ்யத்தை தங்கள் தலைவர்கள் ஏற்படுத்தத் தவறமாட்டார்களென்ற நம்பிக்கையும் இந்தியர்களுக்கு உண்டு.

ராஷ்டிரீயர்களுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லை இருந்திருந்தால் அவர்கள் சட்டவிரோதமான காரியங்களில் இறங்கியிருக்கமாட்டார்கள் இந்தியாவில் நூற்றுக்கு எண்பத்தைந்து பேர் ஹிந்துக்கள். அவர்கள் விரும்பினால் எந்த ராஜ்யத்தையும் [illegible] முடியும். ஆயினும் பொதுஜன ஆதரவு பெற்று சட்டசபைகள், கவுன்ஸில்களை கைப்பற்றி அதிகாரத்துக்கு வருவதென்ற நியாயமான வழியை பாஸிஸ்டுகள் மேற்கொள்ளமுடியாதென்பது வெளிப்படை. எனவே அவர்கள் பாஸிஸ்டு முறைகளை அனுசரிப்பதில் ஆச்சரியமில்லை.

ராஷ்டிரீயர்கள் ஆரம்பித்திருக்கும் நடவடிக்கை அரசாங்கத்தின் கொள்கைக்கு விடுக்கப்பட்டிருக்கும் சவாலாகும். ஒரு தடவை சட்டம் மீறப்படுவதை அனுமதித்த பிறகு திரும்பவும் சட்டத்தை நிலை நிறுத்துவது அசாத்தியமாகப் போய்விடும். அமைதியான முறையில் ஒரு ஸ்தாபனம் பிரசாரம் [illegible] இந்தியாவில் தடையேதுமில்லை. ஆனால் சமாதானத்தை குலைக்கும் நடவடிக்கைகளை எந்த ஒரு சர்க்காரும் அனுமதிக்கமுடியாது. நியாயமான பிரசாரம் பஹிரங்கமாக நடத்தலாம். ராஷ்டிரீயர்கள் அப்படிச் செய்யவில்லை. தங்களுடைய நடவடிக்கைகளை மர்மமாகவே வைத்திருக்கின்றனர். ரகசியமாக வேலைகளைச் செய்கின்றனர். இன்று ராஷ்டிரீயர்களின் சர்க்கார் இருந்திருந்தாலும் இம்மாதிரி [illegible] நசுக்காமல் விட்டுவைக்க சம்மதித்திருக்க முடியாது.

இந்தியர்களுக்கு இன்று வேண்டியது ஹிந்து ராஜ்யமோ ராம ராஜ்யமோ அல்ல உண்ண உணவு வேண்டும். உடுக்க உடை வேண்டும் இருக்க வீடு வேண்டும். ஹிந்து ராஜ்ய கோஷங்களால் அமைதியைக் கெடுத்து சர்க்காரின் கவனத்தை வேறுபக்கம் திருப்பி நாட்டின் சக்தியை விரயமாக்குவதால் அது கிடைத்துவிட முடியாது. நாட்டில் அமைதி நிலவுவதன் மூலம், சர்க்கார் சக்தி முழுவதையும் நிர்மாணத் துறையில் ஈடுபடுத்துவதன் மூலம், நாட்டின் உற்பத்தி பெருகுவதன் மூலமே அது சாத்தியம்.

ராஷ்டிரீயர்களின் போக்கு தவறு. இந்தியமக்கள் அதை ஆதரிக்கத் தயாராயில்லையென்பதை கடந்த சில தினங்களின் சத்தியாக்கிரஹம் வெளிப்படுத்தியிருக்கிறது. மக்களிடையே உணர்ச்சியோ, உற்சாகமோ ஏற்படவில்லை. தினசரி வாழ்க்கையில் ஒருவித மாறுதலையும் காணோம். இந்தியா கடந்து கொண்டிருக்கும் இன்றைய நெருக்கடியான கட்டத்தில் இந்தியர்கள் ஒரு முகமாக தங்கள் சக்தியை நிர்மாணத்துறையில் ஈடுபடுத்தவேண்டிய தவசியம்.

இந்தியப் பிரதேசமான காஷ்மீர் தாக்கப்பட்டு இந்தியா போரில் ஈடுபட்டிருக்கிறது. சுயமரியாதையுள்ள ஒவ்வொரு இந்தியனும் காஷ்மீர் போரின் வெற்

## தாய்நாட்டுக்கு துரோகம் செய்ய அமானுல்லா மறுப்பு

## பாகிஸ்தான் சதி பலிக்கவில்லை

மாஜி ஆப்கன் அரசரான கான் அமானுல்லாகானை இன்றைய அரசர் ஷாஹ் ஜாஹிர்ஷாஹ் மன்னித்து விட்டதால் அமானுல்லா ஆப்கனிஸ்தானுக்கு திரும்பி வரப்போகிருரென்று ராய்ட்டர் செய்தியொன்றை பத்திரிகைகள் சமீபத்தில் வெளியிட்டிருந்தன. மறுநாளே அமானுல்லாகான் திரும்பிவருவது சம்மந்தமான செய்தி உண்மையல்லவென்று ரோமிலிருந்து தகவல் கிடைத்தது அதிலிருந்து திரைமறைவில் நடந்த சில ருசிகரமான விஷயங்கள் வெளியாகியிருக்கின்றன.

ஸிந்து நதிக்கு அப்பாலுள்ள பிரதேசக் கோரிக்கையை ஆப்கானிஸ்தான் கைவிடாமலிருப்பதால், கான் அமானுல்லாகானுக்கு எல்லைப்புரத்தில் தஞ்சமளித்து, ஆப்கன் அரசருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ய மலைஜாதியினரைத் தூண்டிவிடுவதற்கு வேண்டிய உதவியளிக்குப்படி, ஸர் ஜார்ஜ் கன்னிங்ஹாம் பிரிட்டிஷ் சர்க்கார் அனுமதியின் பேரில், பாகிஸ்தானுக்கு ஆலோசனை கூறினர். அதையொட்டி ரோமிலிருக்கும் அமானுல்லாகான் மீது பாகிஸ்தான் வலையைவீச ஆரம்பித்திருந்தது. இன்று ஆப்கான் அரசராயிருக்கும் ஜாஹிர்ஷாஹ் மீதுள்ள பழைய வஞ்சத்தை தீர்த்துக் கொள்ளும்படி அமானுல்லாவைத் தூண்டிவிட முயற்சிகள் நடந்தன. பாகிஸ்தான் நிதி மந்திரியான மிஸ்டர் குலாம் முஹம்மத் ரோமில் அமானுல்லாகானை அந்தரங்கமாய் சந்தித்தார்.

இன்று ஆப்கனில் இருக்கும் ஆட்சி தனக்குப் பிடிக்கவில்லையாயினும் ஒரு தேசபக்தன் என்றமுறையில் மற்றவர்களின் சொந்த வெறுப்புக்காக தாய்நாட்டுக்கு தீங்கு செய்யவும், அன்னியர்களிடம் தன்னை விற்கவும் தான் தயாராயில்லையென்றும் அமானுல்லாகான் பதிலளித்தாராம்.

மேலும், பிரிட்டிஷாரின் முயற்சியால் பாகிஸ்தான் அமைந்திருக்கிறது. இருபது வருஷங்களுக்கு முன்னுல் ஆப்கனில் பிரிட்டிஷார் செய்த சதியால் நாள் பட்டத்தை இழக்க வேண்டிவந்தது பாகிஸ்தானுக்கு உதவி செய்வது பிரிட்டிஷாரின் கைக்கருவியாக இருப்பதற்கு ஒப்பாகுமென்று கூறியதாகச் சொல்லப்படுகிறது. இவ்விதமாக பாகிஸ்தானின் வெறுக்கத்தகுந்த சூழ்ச்சி பலிக்காமல் போய்விட்டது.

---

றிக்காக சாத்தியமான அனைத்தும் செய்வது கடமை. உள் நாட்டில் குழப்பத்தை உண்டுபண்ணி சர்க்காரின் கவனத்தை வேறுபக்கம் இழுப்பது நாசகரமான செய்கையாகும். அவசியமானல் தோட்டாக்கள் பிரயோகித்தும் ராஷ்டிரீயர்களின் கொட்டத்தை அடக்கியே தீருவோமென்று சர்தார் பட்டேல் எச்சரித்ததை வரவேற்கிறோம். சர்தாரின் எச்சரிக்கைக்குப் பிறகு ராஷ்டிரீய சுயம் சேவக் சங்கத்தினர் விழிப்படைந்து தங்கள் நாசகரமான போக்கைக் கைவிடுவார்களென்று நம்புகிறோம்.

## ஆர் எஸ் எஸ் பாகிஸ்தானை ஆதரிக்கின்றனர்.

(ராம் மனோஹர் லோஹியா)

பாகிஸ்தானுக்கு சாதகமானதும், முஸ்லிம்களுக்கு எதிரானதும் உள்நாட்டுச் சண்டைக்கு ஆஸ்பதமான பிற்போக்காளர்களின் கட்சிதான் ராஷ்டிரீயசுயம் சேவக் சங்கம். முஸ்லிம்களை எதிர்த்தாலும் சேவக் சங்கம் இருசமுதாயக் கொள்கையை ஆதரிக்கின்றது. இருசமுதாயக் கொள்கையை ஆதரிப்பவர்கள் பாகிஸ்தானை ஆதரிப்பவர்களேயாவர் இன்று எல்லை காந்தியான கான் அப்துல்கப்பார்கான் சிறையில்கிடக்கிருர். அறு நூறுக்கும் அதிகமான குதாயீகித்மத்கார்கள் கொல்லப்பட்டுப்போனர்கள். சுதந்திரப் போராட்டத்தில் மஹாத்மா காந்திஜீயை ஆதரித்ததும், இருசமுதாய கொள்கையில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லாததுமே அதற்குக் காரணம். இங்கிலையில் இந்திய ஐக்கியத்தை ஆதரிப்பவர்கள் பட்டாணியர்களா? அல்லது ராஷ்டிரீய சுயம் சேவக்சங்கத்தினரா?

## தஞ்சை ஜில்லா அரசியல் மகாநாடு

### அதிராம்பட்டணம்

15—12—48-ல் அதிராம்பட்டணத்தில் நடைபெற்ற தஞ்சைஜில்லா அரசியல் மகாநாட்டு வரவேற்பு கமிட்டி நிர்வாககூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீ. 1. 23—1—49௳ அதிராம்பட்டணத்தில் மகாநாட்டை நடத்துவதென்றும், மகாநாட்டுக்கு த. நாடு கா. கமிட்டி தலைவர் ஸ்ரீ காமராஜ் அவர்களை தலைவராக தேர்ந்தெடுக்க பிரதம கமிட்டிகளுக்கு சிபாரிசு செய்வதென்றும் மகாநாடு நடத்தும் இடத்துக்கு ஆஸாத் நகர் என்று பெயரிடவும் தீர்மானிக்கப்பட்டது.

மகாநாட்டை திறந்துவைக்க மத்திய சர்க்கார் ரயில்வே இலாகா மந்திரி கனம் K. சந்தானம் அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிருர்கள். மகாநாடு வேலைகள் மிக ஜரூராக நடந்துவருகிறது.

R. வரதராஜுலு, காரியதரிசி.

---

(7-ம்பக்கத் தொடர்ச்சி)

பற்றுகின்றனர். இந்த உண்மைகளை முன்வைத்து சங்கத்தின் மீதுள்ள தடையை நீக்குவது மத அடிப்படையற்ற சர்க்காருக்குப் பொருந்துமா? காங்கிரஸ் அழிந்துவிடாதா? இந்தியா அழிவைநோக்கி போக வேண்டியிருக்காதா? என்று இந்திய சர்க்காரையும் குறிப்பாக பண்டித ஜவஹர்லால்நேருவையும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

நாட்டில் அமைதியும் சமாதானமும், சௌஜன்யமும் நிலவி இந்தியா முன்னேற்றமடைய வேண்டுமானல் சங்கத்தின்மீதுள்ள தடையை நீக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறோம் தடை விதிக்கப்பட்டிருந்தும் சங்கம் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதை எவ்விதத்திலும் நிறுத்தப்படவேண்டும்.

காரியதரிசி,
வார்டு நெ. 1, காங்கிரஸ்கமிட்டி, ஜில்லா 9, டெல்லி.

# கலை.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இசை இந்தியாவில் ஏற்கனவே மிகவும் அபிவிருத்தி செய்யப்பட்ட அறிவியற் கலையாகவும் இருந்தது கடுமையான இஸ்லாம் அதை ஆதரிக்கவில்லை. எனினும் தற்காலத்திய இந்திய இசை இஸ்லாமியச் செல்வாக்குக்கும் எழுச்சிக்கும் மிகவும் கடுமைப்பட்டுள்ளது. தற்காலத்திய இந்திய இசைக் கலையின் அடித்தளம் இந்து மயம்; மேலலங்காரங்கள், இந்து முஸ்லிம் கூட்டால் ஏற்பட்டதாகும். இக்காலத்திய ஏராளமான இசைக்கருவிகள் தோன்றி வளர்ந்த வரலாறுகள் எழுதப்படுவதுண்டானால், இந்து முஸ்லிம்களுடைய கூட்டு முயற்சியின் பயனால் இக்கருவிகள் பல சிறந்த அமைப்புகளுடன் பூர்த்திசெய்யப்பட்டன என்பதும், அதில் முஸ்லிம்களின் முயற்சி குறிப்பிடத் தக்கதென்பதும், சில கருவிகளின் அமைப்பில் அவர்களே முழுப்பங்கும் எடுத்துள்ளார்கள் என்பதும் காணப்படும் என்பதில் எனக்கு ஐயமில்லை. இதைப் போலவே தற்காலத்திய ராகங்களையும் ராகினிகளையும் உருவாக்க முஸ்லிம் இசைவாணர்கள் நாளா வட்டத்தில் பெரிதும் உதவியிருக்கிறார்கள்.

'இஸ்லாம் வந்த ஆதிகாலத்தில் ஓவியத்தைப் போல இசையும் பெரிதும் நலிவுற்றது. ஆனால் அது அதேகாரணத்தினால் அன்று; வேறு எதையும் சிந்தை செய்ய விடாதபடி இதுவே முழுமனத்தையும் கவர்ந்து ஆட்டிவைத்த தாயிருக்கலாம்................... யாரையும் தன் பாலிழுக்கக்கூடிய இச்சக்திகாரணமாக இசை வெறுக்கப் பட்டிருக்கலாம். வெறுக்கப் பட்டிருப்பினும் மனித இயற்கையை எத்தனைநாளுச்கு அடக்கி வைத்திருப்பது? ஓவியத்தைப் போலவே இக்கலையையும் மெதுவாகப்பலை ஆரம்பித்தார்கள். வேண்டுமென்றால் ஓவியத்தின் மீது கொண்ட ஆர்வத்தைவிட இதன் மீதுகொண்ட ஆர்வம் தனிவாயிருக்கலாம். இசைப்பயிற்சி மிகுதியும் விரும்பப்பட்ட ஈரான் நாடு இஸ்லாமைத் தழுவியவுடன் முஸல்மான்கள் இக்கலையின் மீதுகொண்ட மனப்போக்கில் பெரிதும் மாறுதல் ஏற்பட்டது. தவிர முஸ்லிம் ஞானியரான சூபிகளின் செல்வாக்கும் இக்கலையைப் பற்றிய கருத்தை மாற்றியது. இசை ஆன்மாவை உயிர்வழியில் செலுத்தும் சக்தி வாய்ந்தது என்றும், ஆன்ம சாதனைக்கு அனுசரணையானதென்றும் அவர்கள் நம்பினார்கள். இவ்விதமாக இசைக்கலை மீதிருந்த தீண்டாமை நெடுந்தூரம் விலகியது. முஸல்மான்கள் இந்தியாவில் குடியேறி வாழத்தலைப்படவும் நிலைமை மிக மிகத் தெளிவாயிற்று. இந்துக்களுடைய சமூக, வாழ்வுத் திட்டத்தில் இசை உயர்ந்த இடம் பெற்றிருப்பதைக் கண்டார்கள். இதன் விளைவாக இசைக் கலை பெரிதும் பரவலாயிற்று. பாடகர்கள் இல்லாத கொண்டாட்டங்களில்லை யென்று கூடச் சொல்லும் படியான நிலைமை வந்தது. மசூதிகளில் நடைபெறும் தொழுகை மாத்திரம் எப்போதும் போல கண்டிப்பான மதப்போக்கில் வாய்ப்பாட்டோ வேறு கருவி இசையோ ஒன்றுமின்றி நடந்தது. ஆனால் மத சம்பந்தமான சில கூட்டங்களில் குவாலிஸ் எனப்படும் பாடகர்களால் குவாலிஸ் எனப்படும் தெய்வக் காதற் பாட்டுக்கள் பாடுவது வழக்கமாகி வந்தது. இசை மீது சூபிகள் கொண்டுள்ள பற்றுதலே இதற்குக் காரணம்; 'சுருங்கக் கூறின் நாம் சாதாரணமாகக் கேள்விப்படுகிற அளவுக்கு மேலாகவே முஸ்லிம் இந்தியாவில் இசை மிகவும் விரும்பப் பட்டது' இதற்கொரு காரணம், இந்திய முஸ்லிம்களிற் பெரும்பாலோர் ஆதியில் ஹிந்துக்களாகவோ அல்லது ஹிந்துக்கிளையில் தோன்றியவர்களாகவோ இருந்தனர் என்பதாகும். அவர்கள் இஸ்லாமைத் தழுவிய பிறகும் இசைக்கலையை விட்டு விடாதபடி அதில் அவ்வளவு மோகம் கொண்டவர்கள். இதன் விளைவாக இக்கலை முஸ்லிம்களிடையே மெதுவாகப் பரவியது; எங்கும் விரும்பப்பட்டது. இதர அருங்கலைகளைப்போல இசைக்கலையும் ஹிந்து முஸ்லிம்களிடை நெருங்கிய பழக்க மேற்படுவதற்குப் புதியதொரு வழி கோலிற்று என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். முஸ்லிம்கள் இந்தியாவுக்கு வந்த நாளிலிருந்தே கூட்டுறவும் கலப்பும் ஏற்படலாயிற்றென்பது, எப்படி இவ்விரு சமூகத்தாரும் தம்மிடமுள்ள அருநிதியங்களைக் கொண்டும் கொடுத்தும் உதவுவதன் மூலம் ஒருவரையொருவர் வளப்படுத்தினார்கள் என்பதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது'

'இசையாகிய சகோதரக் கலையும் சக்கரவர்த்தியால் பெரிதும் ஆதரிக்கப்பட்டது. அவரது ஆட்சியில் இசை மேன்மை பெற்றது; உயர்நிலை எய்தியது. அவருடைய சபையில் ஏராளமான இசைவாணர்கள் இருந்தார்கள்—ஹிந்துக்கள், ஈரானியர், தூரானியர், காஷ்மீரிகள், ஆண் பெண் இரு பாலாரும் அங்கிருந்தனர்........... உலகப் புகழ்பெற்ற மியான் தான்சேன் அக்பரது அரசவைப்பாடகர்; இஸ்லாமுக்கு மதம் மாறிய ஹிந்து. குவாலியரில் உள்ள அவருடைய சமாது இன்றும் இந்திய இசைவாணர்க்குப் புண்ணிய ஸ்தலமாக விளங்குகிறது. அக்காலத்தேதான் புகழ்வாய்ந்த இசை வல்லுநர் ஹரிதாஸ[illegible] விளங்கினார். அவர் தான்சேனுக்கு ஆசிரியர்; இரண்டாவது

தான்சேன் எனப்படும் ராமதாஸுக்கும் ஆசிரியர். இந்த ராமதாஸ் லக்ஷ்மணபுரியிலிருந்து வந்தவர்; ஒரு சமயம் கான் - இ - கானனிடம் ஒரு லட்ச ரூபாய் சன்மானம் பெற்றவர்.......... அக்பர் காலத்தில் இசை சிறந்து விளங்கியது. குரலிசையில் எத்தனையோ ராகங்கள், ராகினிகள் அவைகள் யாவும் நன்கு பயிலப்பட்டன அவைகளில் அநேகம் போற்றிப் பயில்வாரின்றி மறைந்தொழிந்தன. குரலிசை போன்று கருவிகளும் கருவியிசையும் நன்கு பயிலப்பட்டன. இசைக்கலைத் துறையில் ஹிந்து முஸ்லிம்கள் தத் தம் அருநிதியைக் கொண்டும் கொடுத்தும் உதவி கலையை வளப்படுத்தினார்கள் என்பது தெளிவாகப் புலனாகும். இக்கலைக் கலப்பு அக்பர் காலத்தில் புதிதாக ஏற்பட்டதல்ல அதற்கு முன்பே நெடுங்காலந்தொட்டு நடைபெற்றுவந்தது. மஹமதியர்களின் வருகைக்குப் பிறகு இந்தியஇசையின் சரித்திரம் இவ்விருவகுப்பாரிடையே சமூக வாழ்விலும் அரசியல் வாழ்விலும் நெருங்கிய பழக்கத்தையும், கூட்டுறவையும் எடுத்துக் காட்டுகிறது. உதாரணமாக கேயால் என்பது ஜான்பூரின் சுல்தான் ஹுசேன் ஷார்க்குவியால் கண்டு பிடிக்கப்பட்டதென்று சொல்லப்படுகிறது. ஹிந்து இசையில் அது ஓர் உறுப்பாக அமைந்திருக்கிறது. அதே போல துருபாது மகமதிய இசையில் சென்றடைந்திருக்கிறது. இந்து இசையின் முன் காலத்திய நிலைமை, எங்கிருந்தும் நல்ல அம்சங்களைத் தாராளமாக எடுத்துக்கொள்கிற இன்றைய நிலைமைபோல, நூற்றாண்டுகளாக நடைபெற்றுவந்த இசைக் கலப்பையே தெளிவாக எடுத்துக் காட்டுகிறது............... பேரரசர்களும் மாகாணத் தலைவர்களும் மாத்திரம் இவ்வருங்கலையைக் கவனித்தார்களென்பதில்லை. பிரபுக்களும் இசையமுது பருகினார்கள். தங்களுடைய குடும்பத்தினருக்கும் இசை விருந்தளித்தார்கள்' 'ஷாஜஹான் இசையாதரவில் பெருந்தகையன் அவனும் இனிமையாகப் பாடுவானெனத் தெரிகிறது. ராமதாஸரும், மஹா பட்டரும் அவனுடைய இரண்டு சிறந்த பாடகராவர்.'

இன்றுள்ளவர்களில் கலை நுணுக்கத்தைத் தெளிவாய் உணர்த்த வல்லவர்களது பெயர்களை எண்ணிப் பார்த்தால், சந்தேகமில்லாமல் அதில் முஸல்மான்களிருப்பார்கள். மொத்த ஜனத்தொகையில், அவர்களுடையவிகிதத்திற்கும் அதிகமாக இருப்பார்கள். சட்ட சபைகளில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்தானங்களுக்கும் அதிகமாக ஒருக்கால் இருப்பார்கள் இந்தியாவிலுள்ள இசை வாணர்களில் இசை பற்றிக் கொஞ்ச நஞ்சம் தெரிந்தவர்களுமாகக் கூடியிருக்கும் கூட்டத்திற்கு யாரேனும் தற்செயலாய்ச் சென்று பார்த்தால், எந்தச் சந்தேகப் பேர்வழியும் இசைக்கலப்புக்கு அசைக்க முடியாத ஆதாரத்தை நேருக்கு நேர் காண்பான் இந்த இசைக் கலப்பை, சுருங்கக் கூறின் இந்திய இசைக்கலை காட்டும் இந்தியப் பண்பாடு எனக் கூறலாகும். வகுப்புவாரி அல்லது அவ்வவ்விடத்திய இசை இந்தியாவின் எந்தப் பாகத்திலும் இருக்குமானால் அது இந்தியப் பண்பாடு ஆகாது

'இந்தியாவில் முஸ்லிம் ஆட்சியில் கலா நிலை' என்ற தம் புத்தகத்தில் திரு S. M. ஜாபர் இந்து முஸ்லிம்களிடை ஏற்பட்ட உறவைச் சுருக்கமாகக் கூறுகிறார்.

இந்தியாவுக்கு வந்த முஸல்மான்கள் இந்தியாவைத் தமது சொந்த நாடாகக் கொண்டு தாங்களும் இந்தியரானார்கள். அவர்களால் இந்துக்களுடைய நாட்டில், என்றென்றும் பகைமையில் வாழ்வது முடியாத காரியம் இரு சாராரும் கூடி வாழ்ந்ததால் நெருங்கிய உறவுக்கும், ஒருவரை யொருவர் நன்கு அறிவதற்கும் வழி யேற்பட்டது. நேசமுள்ள அயல் வீட்டார்களாக இவர்கள் வாழுவதற் கேற்ற பொது வழியைக் கண்டுபிடிக்கும்படி சந்தர்ப்பங்கள் இவர்களை நாளடைவில் நெருங்கின; பாரசீகம், சமஸ்கிருதம் என்ற ஊடுபாவுகளிலிருந்து புதிய மொழியை உருவாக்கினார்கள். இந்து முஸ்லிம்களுடைய பொது கலாசார ஆறு தன்னுடைய பழைய படுகைகளை விடுத்து உர்து என்னும் புதிய வாய்க்கால் வழியாகப் பாய ஆரம்பித்தது. இவ்வாறு உருவாக்கப்பட்ட கலாசாரம் இந்து அல்லது மு லிம் மயமானதல்ல. அது இரண்டின் மனமிசைந்த சேர்க்கையால் ஏற்பட்டதாகும். முஸ்லிம் அரசர்களும் தலைவர்களும் ஹிந்துக்கலைகளையும், இலக்கியங்களையும், அறிவுநூல்களையும், தத்துவத்தையும் ஆதரித்தார்கள். தங்களுடைய பள்ளிக்கூடங்களையும் சமயப் பாடசாலைகளையும் யாவரும் சாதிமத பேதமின்றிப் பயிலும் வண்ணம் திறந்து வைத்தார்கள். சாதுக்களும் முனிவர்களும் செய்தது போல இவர்களும் தங்களுக்குரிய துறைகளின் மூலமாக இந்து முஸ்லிம் உறவை ஏற்படுத்த முயன்றார்கள், இதன் பயனாக இரு சமூகத்தாரிடையே நல்ல இணக்கம் நிலவியது. ஆகவே, இந்துக்கள் முஸ்லிம் ஆலயங்களில் தின்பண்டங்கள் அளித்தல், திருவுளத்தையறிவதற்குக் குரானை உபயோகித்தால், துரதிருஷ்டங்களை விரட்டுவதற்குக் குரானை தம்மோடு வைத்துக்கொண்டால், முஸ்லிம்களுக்கு விருந்தளித்தால், முஸ்லிம்களும் இந்துக்களிடம் இவ்வாறு பரஸ்பரம் நடந்து கொண்டால் இதிலொன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை......... இந்திய முஸ்லிம்களிற் பெரும்பாலோர் இந்துப் பொதுமக்களிலிருந்து வந்தவர்கள். இவர்கள் சந்தேகமில்லாமல் பல வழிகளில் திருந்தினார்களென்றாலும் அவர்களுடைய சமூக நிலைமையும் கலாசாரமும் உடனே மாறிவிடவில்லை. தங்களுடைய மதத்தை அவர்கள் மாற்றிக்கொண்டார்கள். வாஸ்தவம்தான் ஆனால் தங்களுடைய பழைய பழக்க வழக்கங்கள், பொழுது போக்குகள், பயிற்சிகள்

எல்லாவற்றையும் அப்படியே வைத்துக் கொண்டார்கள். மதமாற்றம் அவர்களுடைய சுற்றுப் புறங்களையும் சூழ் நிலைகளையும் மாற்றிவிடவில்லை. அவைகளோ முழுக்க முழுக்க சமூகத் தீண்டாமை, சாதி வேற்றுமைகள் நிறைந்தனவாக இருந்தன. இதன் விளைவாக இந்து சமூகத்தின் அம்சங்களைக் கொண்ட இந்தோ — முஸ்லிம் சமூகம் ஏற்பட்டது.'

கலாசாரம் என்பது சிக்கலான விஷயம் ஒரு சமுதாயத்தின் அம்சங்களை விளக்குவது கடினமாவது போல கலாசாரத்தின் அம்சங்களை விளக்குவதும் கடினமானதாகும். ஆனல் ஒரு கலாசாரத்தில் பிறந்து வளர்ந்தவன் வேறொன்றிலிருந்து அதை பிரித்துக் காணத் தவறமாட்டான், ஒரே கலாசாரப் பிரிவு அல்லது கூட்டத்திலும் அனேக உட்பிரிவுகளிருக்கக் கூடும்.

வேறுபட்ட அல்லது ஒன்றுக்கொன்று நேர் எதிரிடையான சமூக சமய சக்திகள் ஒன்றுபட்டதாலேற்பட்ட கலாசாரத்தில் இத்தகைய உட்பிரிவுகளும் கூட்டங்களும் இல்லாமலிரா. அதனல் இந்தச் சகல உட்பிரிவுகள், கூட்டங்களுக் கெல்லாம் சேர்த்து மொத்தமாக ஒரு பொதுக் கலாசாரம் இருப்பது ஒழிந்துவிடாது ஒரு கலாசாரத்தோடு இன்னொரு கலாசாரத்தை ஒப்பிட்டுப்பார்க்கும் சரியானமுறை என்னவென்றல், ஒரு கூட்டம் அல்லது பிரிவின் மொத்தக் கலாசாரத்தோடு இன்னொரு கூட்டத்தின் கலாசாரத்தை யொப்பிடுவதே யன்றி, ஒரு பெருங்கூட்டத்திலுள்ள உட்பிரிவுகளின் கலாசாரங்களை ஒப்பிட்டுக் கொண்டிருப்பதல்ல. அவைகளுக்குள் வேறுபாடுகள் இருப்பினும் பொதுவான அம்சங்களையும் நிறையக் கொண்டிருக்கும். இவ்விதமாக இந்தியாவிலுள்ள ஹிந்துக்கள், முஸ்லிம்கள், கிருஸ்தவர்கள், பார்சிகள். சீக்கியர்கள் ஆகியோர் தங்களுக்குள் வித்தியாசம் கொண்டிருந்தாலும் பொதுவான அம்சங்களும் உடையவர்களாக இருக்கிறர்கள். அவை காரணமாக அவர்களிடையே காணப்படும் ஓர் ஐரோப்பியனைத் தனியாகப் பிரித்துவிடலாம். இதைச் சந்தேகிக்கிறவர்கள் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளிலோ அல்லது பாதுகாப்பு நாடுகளிலோ அல்லது டொமினியர்களோடு வாழும் இந்தியரின் நிலைமைச் சற்றுகவனிப்பாராக. இந்திய இந்துக்களும் முஸ்லிம்களும் தனித்தனியான இரு கலாசாரங்களைச் சேர்ந்தவர்கள் என்றவர்களின் வாயடைக்கும்படியாக நிலைமை அங்கிருக்கிறது தென் ஆப்பிரிக்கனுக்கு அல்லது ஆஸ்திரேலியனுக்கு அல்லது கனடிய ஐரோப்பியனுக்கு அல்லது கென்யாவிலுள்ள ஐரோப்பியனுக்கு இந்தியன் எல்வாறு தோன்றுகிறன்? அவன் இந்துவாயினும், முஸல்மானுயினும், சீக்கியனுயினும், பார்ஸி, கிறிஸ்தவனுயினும், யாராக இருபினும் சரி, ஐரோப்பியக் கலாசாரத்துக்கு ஊனமிழைக்க விடாதபடியும் வாழ்க்கைத் தரத்தைக் குறைக்க விடாதபடியும் எந்த இந்தியனும் அவனுக்குரிய இடத்தில் வைக்கப்பட வேண்டியவனுகிறன். இந்த நிலைமை அடிமை நாட்டைச் சேர்ந்த இந்தியனுக்கு மட்டுமல்ல ஆகவே அவனைக் கீழ் மகனுக நடத்தலா மென்பதல்ல. சுதந்திரநாட்டினரான சீனரும் இத்தகைய கண்காணிப்பிலிருந்து தப்ப முடியாது ஜப்பானியர் சமீப யுத்தம் வரையில் மதிக்கப்படாவிட்டாலும் மிகவும் கவனிக்கப்பட்டவர்கள். அவர்களும் ஐரோப்பியக் கலாசாரக் காவற்காரர்களிடமிருந்து தப்ப முடியாது, மேற்குக் கோளத்திலும் சரி, கிழக்குக் கோளத்திலும் சரி, வாழ்க்கைத் தரத்தைக் குறைக்க இவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். ஆசிய ஐரோப்பியக் கலாசார வேற்றுமைகளை அடிப்படையாகக் கொண்டே இவ்வாறு வித்தியாசம் பாராட்டப்படுகிறது. இந்துக்களும் முஸ்லிம்களும் கூடி அரும்பாடுபட்டு, அதற்கென வாழ்ந்து ஒரு கூட்டுக் கலாசாரத்தை உண்டாக்கி யிருக்கிறர்கள். அது இந்தியக் கலாசாரமெனப்படும் என்பதை மறுப்பதெல்லாம் வெறும் உதவாக்கரைத்தனமே இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் வித்தியாசம் இருக்கலாம். இருந்தாலும் அவர்களுக்குப் பொதுவான இந்தியக் கலாசாரம் உண்டு. வெளிநாட்டானையும் இந்தியனையும் பிரித்துக்காட்டுவது இந்தக் கலாசாரமே. அந்த வெளிநாட்டான், மேற்கிலிருந்தோ அல்லது கிழக்கிலிருந்தோ, புது உலகத்திலிருந்தோ அல்லது பழைய உலகத்திலிருந்தோ, எந்த நாடு அல்லது கண்டங்களிலிருந்து வரினும் இந்தியக் கலாசாரம் அவனைத்துண்டாகக் காட்டிவிடும். இந்து முஸ்லிம்கள் ஒன்றுக்குள் ஒன்றுகி வாழ்ந்து வந்த நெடுங்காலச் சரித்திரத்தாலும் போரிலும் சமாதான காலத்திலும் ஒன்று கூடிச் செய்த முயற்சிகளாலும் இப்படித்தான் வந்து நேருமேயொழிய வேறுவிதமாக நிகழ்ந்திருக்க முடியாது. இரண்டு மாங்கன்றுகளை ஒட்டவைத்தால்— அல்லது ஒரு மாங்கன்றை மற்றொரு மாக்கிளையோடு ஒட்டுப்போட்டால். ஒட்டு மாத்திலிருந்து நல்ல ஜாதிப் பழம் கிடைக்கும் அவைகளைப் பிரிப்பது தவறு; கொடுமையுங்கூட. எல்வளவோ புயல்களைச் சமாளித்து, ஒன்றுசேர்ந்து வைரம் பாய்ந்து இவ்வளவு காலமான பிறகு அந்த மாதிரி பிரிப்பதற்கும் அவை கிள்ளுக்கீரை யல்ல என்பதை மனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும் ஒருக்கால் அம்முயற்சி வெற்றியடையுமானல் இருசாராருக்கும் அழிவு வலுக்குறைவு. மேலும் நாலாபக்கங்களிலிருந்து கிளயபும் எதிர்ப்புக்கும் தாக்குதலுக்கும் அவர்கள் இரையாகவும் நேரிடும்.

— இந்தியா பிரிக்கப்பட்டால்...

பாபு ராஜேந்திர பிரஸாத்.

# அத்திப் பழங்கள்.

(ஒரு ஜப்பானியக் கதை)

மேட்டின் மீது ஒரு பழங்கால கிராமம். அதன டியில் வரண்ட கானாறு தகிக்கும் வெய்யிலில் புல் லைத்தேடி ஒரு கழுதை அலைந்துகொண்டிருந்தது. இழைக்கப்படாத கற்களால் கட்டப்பட்ட சிறிய வீட்டுக்குள் படுத்திருந்தான் பெட்ரோ. ஒரு காலத்தில் தாமிர வர்ணமாகயிருந்த அவனுடைய முகம் இப்பொழுது தீய்ந்திருந்தது. அதில் வியர்வைத் துளிகள் மின்னிக்கொண்டிருந்தன.

"ரிவ்கா!....ரிவ்கா !!..... அடியே ரிவ்கா !!! ....."

புருஷனுடையகுரலைக்கேட்டும் ரிவ்கா பேசவில்லை. குப்புறப்படுத்திருந்தாள். அழுக்குப்படிந்த் உருண்ட கெண்டைக்கால்களில் நீல நிற நரம்புகள் தடித்திருந்தன அவிழ்ந்து கிடந்த் சிக்கு விழுந்தகூந்தலை சீப்பு தொட்டிருக்குமோ வென்பது சந்தேகந்தான். கையிலிருந்த் காகித விசிறியால்முகத்தில் விசிறிக்கொண்டிருந்தாள்.

"அடியே ரிவ்கா! கேடு கெட்டவளே! கேட்கவில்லையா என்ன! விசிறியைக்கொடு! புழுக்கம் உயிரை வாங்குகிறது!"

ரிவ்கா லட்சியம் செய்யவில்லை. அவள் பாட்டில் விசிறிக்கொண்டிருந்தாள். இளமையில் அவளுடைய முகம் அழகாய்தானிருந்திருச்கும் இன்று வெளுத்திருந்தது. விசாலமான கண்களினடியில் குழிகள் விழுந்திருந்தன. வாலிபத்தில் மூப்பின் சாயல் படித்திருந்தாலும் லட்சணமாகவே இருந்தாள். பாதி மூடிய கண்களால் புருஷனை திரும்பிப் பிப்பார்த்தவள் திரும்பவும் பிரண்டு படுத்துக்கொண்டாள்.

"உன்னை பிராங்கோ குண்டர்கள் தூக்கிப்போக நாசமாய் போனவளே! ஜமீந்தார் நந்த வனத்தில் போய் தூங்கப்போகிறேன்"

பெட்ரோ படுக்கையை விட்டு எழுந்தான். வேகாத வெய்யிலில் அவசர அவசரமாக நடந்து நந்தவனத்தையடைந்தான். பொட்டைத்திடல்; அதைச்சுற்றி மூன்றடி உயரமதில்; அதற்குள்ளே ஒரு ஆலிவ் புதர்; ஜமீந்தார் நந்தவனத்தில் மிஞ்சியிருந்தது அவ்வளவுதான். உள்நாட்டுச்சண்டையில் கொள்ளையடித்து தீக்கிரையான ஜமீந்தார் வீட்டுக் குட்டிச்சுவர் பக்கத்தில் நின்றது. மூதாதையரின் ஞாபகார்த்தத்தை பாதுகாப்பதில் ஜமீன்தாருக்கு அக்கரையில்லை. வருஷத்தில் இரு முறை வருவான். பகுதியை வசூலித்துக்கொண்டு மாட்ரிட்போய்விடுவான். மாட்ரிட் ஆடம்பரங்கள் அவனை வசீகரித்தன. கிராமத்தின் உறுபசியும், தனிமையும் அவனை பயமுறுத்தின. ஜமீந்தாருடைய காவற்காரன் ஒரு கொண்டு கிழவன் தரித்திரன். ஆகையால் உள்நாட்டுச்சண்டையில் தப்பியிருந்த அவன் ஜமீன்வீட்டு நிலவறையில் படுத்திருந்தான்.

நொறுங்கிக்கிடந்த நந்தவனக்கதவு எச்சரித்துக்கொண்டிருந்தது. பெட்ரோ அதை லட்சியம் செய்யவில்லை. உலர்ந்த சருகுகள், வரண்ட தண்ணீர் தொட்டிகள், உடைந்துபோன நிர்வாணமான பெண் சிலை, பெயர்ந்த தளவரிசை, எல்லாற்றையும் கடந்து ஆலிவ் புதரடியில் சென்றான். நிழல் அடர்த்தியாக இல்லாவிட்டாலும் ஆனந்தமாக இருந்தது. ஆலிவ் இலைகள் லேசாக அசைந்தன. ரிவ்கா விசிறுவதைப் போன்ற பிர்ம்மானந்தத்தில் புதரடியில் குறட்டை விட ஆரம்பித்தான் பெட்ரோ.

துப்பாக்கியை தாங்கிய மூன்று சிப்பாய்கள் நந்தவனத்துக்குள் நுழைந்தார்கள். போதை தலைக்கேறியிருந்தது. ஆலிவ் புதரடியில் மிச்சமிருந்ததையும் குடித்துவிட்டு பாட ஆரம்பித்தனர். காட்டுமிராட்டித்தனமான பாட்டு; பிராங்கோவின் புகழ்; தங்கள் ராணுவத்தின் பராக்கிரமம்; ஜனநாயகவாதிகளுக்கு வசவு; அதில் நிரம்பியிருந்தது. சிறிது நேரம். பாடியபிறகு துப்பாக்கிக்கட்டையால் படுத்திருந்த பெட்ரோவை இடித்தார்கள். பெட்ரோ திடுக்கிட்டு எழுந்தான்.

"நம்முடன் சேர்ந்து நீயும் பாடவேண்டும்?"

பெட்ரோ தயங்கினான்.

"பாடுகிறாயா, இல்லையா?"

"பாடுவேன்"

பிறகு ஏன் பேசாமலிருக்கிறாய் !, பாடு !, பாடு !!

"எனக்கு இந்தப்பாட்டு ஞாபகமில்லை நீங்கள் பாடுங்கள். நானும் கூடச்சேர்ந்து பாடுகிறேன்."

"இல்லை நீயே பாடு. பாட்டு உனக்கு ஏன் ஞாபகமில்லை? நீ என்ன கம்யூனிஸ்டா?"

"என்னுடைய பெயர் பெட்ரோ, நான் ஒரு ஏழை விவசாயி. என்னுடைய ஏழுபையன்கள் யுத்தத்துக்கு பலியாயினர். மூன்றுபையன்கள் ஸ்பெயின் ஜனநாயக படையிலும் என் அன்புக்கு பாத்திரமாயிருந்த நான்கு பையன்கள் உங்களைப்போலவே பிராங்கோ படையிலும் சேர்ந்து உயிரை அர்ப்பணித்திருக்கின்றனர். இப்போது என்னிடம் ஒரே பையன் இருக்கிறான். சிறு பையன். பதினேழு வயதாகின்றது. என்னுடைய பிண்டோவுக்கு"

"இல்லை நீ கம்யூனிஸ்டுதான்" ஒரு சிப்பாய் குற்றஞ்சாட்டினான்.

"நான் கம்யூனிஸ்டு அல்ல, நீங்கள் சொல்வது தவறு"

"யார் சொல்லுவது தவறு! நீயா? நாங்களா? "சீக்கிரம் சொல்." ஒரு சிப்பாய் துப்பாக்கிக் கட்டையால் இடித்தான்.

"வேசிமகன்! கம்யூனிஸ்டுதான் இவனை மாஸ்கோ அனுப்புங்கள்" இரண்டாவது சிப்பாய் சொன்னான்.

"மாஸ்கோ போகிறாயா? அங்கு உண்ண உணவும், உடுக்கத் துணியும் வேலையும் கிடைக்கும்" மூன்றாவது சிப்பாய் கேட்டான்.

"அப்படியானால் நான் அவசியம் மாஸ்கோ போவேன்......." பெட்ரோவுக்கு கோபம் வந்தது.

"இவன் அவசியம் போவான்! சீக்கிரமாக இவனை அனுப்பவேண்டும்" சிப்பாய்கள் 'கொல்' லென்று சிரித்தார்கள்

"எழுந்து நின்றுகொள்?" முதல் சிப்பாய் உத்திரவிட்டான்.

"எதற்காக?"

"நீ மாஸ்கோ போகவேண்டுமல்லவா? காலங்கடத்தாதே! சீக்கிரமாக எழுந்துநில்?"

பெட்ரோ எழுந்தான் பீதி கலந்த ஆச்சரியத்துடன் சிப்பாய்களின் முகத்தை நோக்கினான்.

"நந்தவனத்தின் வலது பக்கத்தில் மாஸ்கோ இருக்கின்றது. இடது பக்கத்தில் இருப்பது ஸ்பெயின். நீ மாஸ்கோ போக விரும்புகிறாய்? ஆகையால் மதிலைத் தாண்டிப் போய்விடு" இரண்டாவது சிப்பாய் நையாண்டி செய்தான்.

"நீங்கள் வேடிக்கை செய்கிறீர்கள்"

"போகிறாயா? அல்லது வேறு வழிகாட்டட்டுமா?" இரண்டாவது சிப்பாய் துப்பாக்கியை நீட்டினான். பெட்ரோ ஓடினான் மதிலை தாண்டும் போது மூன்றாவது சிப்பாயின் துப்பாக்கி குண்டு பாய்ந்தது மதிலுக்கு வெளியில் விழுந்த பெட்ரோ திரும்பவும் எழுந்திருக்கவில்லை.

வெடிசத்தம் மேட்டின் நாற்புறங்களிலும் எதிரொலித்தது. வெடிசத்தத்தைக் கேட்டு காவற்காரக் கிழவன் எழுந்து ஓடிவந்தான். ஆலிவ் புதரடியில் சிப்பாய்கள் சிரித்துக்கொண்டு நின்றார்கள்.

"என்ன நடந்தது" காவற்காரன் கேட்டான்

"ஒன்றுமில்லை. ஒரு கம்யூனிஸ்டை மாஸ்கோ அனுப்பிவிட்டோம். அவ்வளவுதான்" சிப்பாய்கள் மேலும் சிரித்தார்கள்.

"அடபாவமே? இவன் பெட்ரோவாச்சே!" கிழவனுடைய உடல் நடுங்கிற்று.

"இவனுடைய வீடு எங்கே? தகவல் கொடுத்து விடலாம்" ஒரு சிப்பாய் கேட்டான்.

"இவன் ஒரு விவசாயி இவனுடைய ஏழு பையன்கள் உள்நாட்டுச் சண்டையில் கொல்லப்பட்டுப் போனார்கள். எட்டாவது பையன் லவண்டிகளுக்குப்பின்னால் அலைந்து கொண்டிருக்கிறான்.

"எட்டாவது பையனுக்கு வயது?"

"பதினேழிருக்கும். பெட்ரோ மத்தியான வேளையில் இங்கு படுக்க வருவான். இனி இங்கு வரமாட்டான். நான் ரிவ்காவுக்குப் போய் தெரிவிக்கிறேன்" கிழவன் பரிதாபத்துடன் தலையை அசைத்தான்

"ரிவ்காவா? அவள் யார்?" ஒரு சிப்பாய் விசாரித்தான்.

"பெட்ரோவின் மனைவி"

முதல் சிப்பாபாய் அர்த்த புஷ்டியுடன் தன் சகாக்களை நோக்கினான்.

"நீ போகவேண்டாம். நாங்களேபோய் அறிவிக்கிறோம். இவனுடைய வீடு எது?" கிழவன் பேசாமலிருந்தான்.

"காட்டுகிறாயா? இல்லையா?" துப்பாக்கி குழாய் கிழவனுடைய நெஞ்சில் பதிந்தது.

"அதோ எதிரிலுள்ள மேட்டின் மீது இருக்கிறது" கிழவன் உளறினான்

ஃ ஃ ஃ

காதலியைப்பார்க்க பக்கத்து கிராமத்துக்குப் போயிருந்தான் பிண்டோ. அவன் அழகன். அந்தப் பக்கத்து பெண்கள் அனைவரையும் அறிவான். அழகாக நாட்டியமாடுவான். ஆகையால் அவனை பெண்கள் அனைவரும் விரும்புவதுண்டு. மாரியா அவனுடைய காதலி. நல்ல அழகி. அவளும் நன்றாக ஆடுவாள். இருவரும் மாதா கோவில் நந்தவனத்தில் திராட்சைக் கொடியில் உட்கார்ந்திருந்தனர். பிண்டோவின் வலக்கரம் மாரியாவின் இடுப்பைச் சுற்றியிருந்தது. அவள்கண்கள் பிரகாசித்தன. அவளுடைய அத்திப் பழ நிறத்துடன் சுவர்ணடால் கலந்து வீசிற்று.

"கொடி அறுந்து விழுந்தால் மாதாகோவில் பாதிரிபார்த்துவிடுவான் பிறகு ஆபத்துதான்" மாரியா சொன்னாள்.

"ஆபத்து என்ன வரப்போகிறது?"

"என்னை முறைக்க முறைக்கப் பார்க்கிறான். கோவிலுக்கு உள்ளேயும், வெளியேயும் என்னைக்

கண்டுவிட்டால் கண்களை அப்படி இப்படி திருப்பவேமாட்டான்.''

"உன்னை காதலிக்கிறான்போலிருக்கு! பயல் சாகத்துணிந்துவிட்டானு என்ன?

மாரியா குறும்புத்தனமாகப் பிண்டோவை நோக்கினுள். இருவரும் ஆனந்த உலகில் சஞ்சரித்தனர்.

"கலியாணத்துக்குப்பிறகு நாம் கோழிகளை வளர்ப்போம். எனக்குக் கோழிக்குஞ்சுகள் ரொம்பப்பிடிக்கும்" பிண்டோ கூறினுன்.

"நான் வீட்டுக் கொல்லையில் வெள்ளரிக்காய் பயிரிடுவேன். எனக்கு ஏழு குழந்தைகள் பிறக்கும்."

"ஏழு போதாது நாம் எட்டு பேர் இருந்தோம். இன்று நான் ஒருவன்தானிருக்கிறேன். குறைந்தது பதினேரு குழந்தைகளாவது வேண்டும் யுத்தத்தில் போனது போக நான்கு பேராவது மிஞ்சமுடியும்"

"இல்லை! ஏழு குழந்தைகளே போதும். நமக்கு யுத்தம் வேண்டாம். பட்டாளத்துக்கு ஆள் சேர்க்க வந்தால் நாம் ஒளிந்துகொள்வோம். சின்னஞ்சிறு வீட்டில் குழந்தைகளுடன் நாம் இருப்போம்."

மாரியா பிடிவாதம் செய்தாள்.

"என்னுடைய கோழிக்குஞ்சுகள்? பக்கத்திலே வயல்; பரந்த நீலவானம். ஸ்பெயின் தேசத்து அழகே அலாதி! வேறு எங்குமே இப்படியிருக்க முடியாது."

"நம்முடைய தேசத்து ஆகாயத்தைப்போல் உலகத்திலேயே கிடையாது" மாரியா தீர்மானமாகச் சொன்னுள்.

இருவரும் வருங்காலக் கனவு உலகத்தில் லயித்து சிறிது நேரம் பேசாமலிருந்தனர். "நான்போக வேண்டும் நேரமாய்விட்டது"

மாரியா மௌனத்தைக் கலைத்தாள்.

"அதற்குள்ளாகவா? முடியாது" பிண்டோ அவளை பிடித்துக்கொண்டான்.

"இல்லை நான் போவேண்டும் நாளை உங்களுக்கு விருந்து. நடனமும் உண்டு. வருவீர்களல்லவா?

இருவரும் பிரிந்து சென்றுர்கள். மானைப்போல துள்ளிக்குதித்து மாரியா மாயமாய் மறைந்தாள்.

மாலையில் பெட்ரோவின் எட்டாவது மகன் அழகாகப்பாடிக்கொண்டே வீடு திரும்பினுன் தகப்பனுடைய பிணத்துக்குப் பக்கத்தில் நிர்வாணமாய்க் கிடந்தது தாயின்சடலம் மிருக இச்சையைத்தீர்த்துக் கொண்டு சிப்பாய்கள் அவளைக்கொலை செய்துவிட்டுப் போயிருந்தனர். எட்டுப் பிள்ளைகளைப் பெற்ற தாய் நிர்வாணமாய் இறந்து கிடந்தாள் அவளுடைய மார்பில் துப்பாக்கிக்குண்டு பாய்ந்திருந்தது பக்கத்தில் கிடந்த கிழிந்த கந்தையால் பிண்டோ தாயின் பிணத்தை மூடினுன்.

காவற்காரக் கிழவன் உள்ளே வந்தான் "உன் தகப்பனை பிராங்கோ சிப்பாய்கள் கொன்று விட்டு என்னிடம் வீட்டை விசாரித்தார்கள்"

கிழவன் சொன்னுன்.

பிண்டோ வாய் திறக்கவில்லை.

"பிணங்களை அடக்கம் செய்ய கிராமவாசிகளை அழைத்துவருகிறேன்"

ஆத்திரத்துடன் காரித்துப்பிவிட்டு வீட்டுக்கு வெளியே ஓடிவிட்டான் பிண்டோ. கிழவன் எவ்வளவோகத்தியும் திரும்பியும்பார்க்காமல் போய்விட்டான்.

ஃ ஃ ஃ

ஆறு மாதங்கள் கழிந்தன. பிண்டோ மாட்ரிட் நகரில் கைது செய்யப்பட்டான். ரிவால்வர், பிரென் துப்பாக்கிகள், கைக்குண்டுகள் அவனிடமிருந்து கைப்பற்றப்பட்டன. தலைமறைவாய் பயங்கர இயக்கத்தில் ஈடுபட்டிருந்த கம்யூனிஸ்டுகளுக்கு ஆயுதங்கள் கடத்துவதில் ஈடுபட்டிருந்தான்.

சார்ஜண்ட் மார்காஸ் கஜகர்ணம் போட்டுப் பார்த்துவிட்டான். எவ்வளவோ சித்திரவதையும் செய்தான். பிண்டோ அசையவில்லை தன்னுடைய சகாக்கள் பற்றி ஒரு வார்த்தையும் அவன் சொல்லவில்லை.

மார்காஸ் ஒரு பணக்காரனுடைய மகன். அழகிய வாலிபன். லார்ட் கிச்னர் போல் முறுக்கு மீசைக்காரன். அவனுடைய தகப்பன் அவனை மாதா கோவிலில் சேர்க்க எண்ணினுன். ஸ்பெயின் தேசத்தில் அதற்கு மதிப்பு அதிகம். ஸ்திரீகள் லோலனுக இருந்த மார்காஸ் மாட்ரிட்டில் உள்ள வேசிகளை விரும்பினுன். ராணுவத்தில் சேர்ந்தால் தன்னுடைய ஆசையைத் தீர்த்துக்கொள்ள முடியுமென்று நம்பி ராணுவத்தில் சேர்ந்தான். எத்தனையோ உபாயங்களைக் கையாண்டும் பிண்டோவிடத்திலிருந்து விஷயத்தைக் கிரகிக்க அவனுல் முடியவில்லை.

மார்காஸ் அவசரத்திலிருந்தான். மாலையில் காதலியை அழைத்துக்கொண்டு படம் பார்க்கப் போக வேண்டியிருந்தது. வாலிபனே மசிவதாகத் தெரியவில்லை. அடிக்கடி கடிகாரத்தை பார்த்துக் கொண்டான் மார்க்காஸ்.

"பதினைந்து நிமிஷங்கள் தருகிறேன். அதற்குள் உள்ளதைக் கக்கிவிடு இல்லாவிட்டால் உன்னை மாஸ்கோ அனுப்பிவிடுவேன்."

பிண்டோ பேசவில்லை.

மார்காஸ் கெடிகாரத்தை எடுத்து முன்னால் வைத்துக்கொண்டு சிப்பாய்களுக்கு சமிக்ஞை செய்தான். இப்பொழுதெல்லாம் ஸ்பெயினில் கம்யூனிஸ்டுகளை உயிருடன் புதைப்பதே வழக்கமாகப் போய் விட்டது. மார்காஸும் அதையே செய்தாக வேண்டும் வெளியில் சிப்பாய்கள் குழி தோண்டிக் கொண்டிருந்தனர். மார்காஸுக்கு அவசரம் தாங்கவில்லை.

"பன்றி மகன்களா! சீக்கிரம் தோண்டுங்களடா குழியை?" மார்க்காஸ் சிப்பாய்களை வையப்புடைத்தான்.

சவக்குழி தோண்டியாயிற்று. பிண்டோ அதில் நிறுத்தப்பட்டான்.

"இன்னும் தப்பமுடியும். காலங்கடந்துவிடவில்லை, உண்மையைக் கக்கிவிடு"

பிண்டோ மௌனம் சாதித்தான். சிப்பாய்கள் இடுப்புவரை மண்ணைத் தள்ளி மூடினர்.

"சொல்லு. நீ யாருக்காக ஆயுதங்கள் கடத்தினாய். அந்த கம்யூனிஸ்டுகளின் பெயரைச் சொல்லிவிடு. உன்னை விடுதலை செய்துவிடுவேன் வயதாகாவிட்டாலும் பரவாயில்லை. உனக்கு போலீசில் நல்ல உத்தியோகம் வாங்கிக் கொடுப்பேன்."

பிண்டோ ஒன்றுமே பேசவில்லை. நெஞ்சு வரை மண் தள்ளியாயிற்று.

"இந்த சிறுவயதில் இறப்பதால் என்ன பயன்? சமுத்திரக்கரையிலே அழகான ஒரு ஊரில் இழைக்கப்பட்ட கற்களால் கட்டப்பட்ட சிறியதொரு வீடு; அதை சுற்றி அத்தி மரங்கள், திராட்சைக்கொடிகள், ரோஜாச்செடிகள், வாசலில் மான் போல் துள்ளிக் குதித்து ஓடும் அழகிய மனைவி..............சொல்லு; இதையெல்லாம் விட்டு ஒரு கம்யூனிஸ்டு நாய் போல் சாக ஏன் ஆசைப்படுகிறாய்?"

தலைக்குமேல் அசைந்துகொண்டிருந்த அத்திக் கிளைகளையும் அதற்கு மேலிருந்த பரந்த நீல நிற வானத்தையும் கழுத்துவரை புதைந்திருந்த பிண்டோ அண்ணாந்து பார்த்தான். அழகான சிறிய வீடு, பக்கத்திலே தோட்டம், மேயும் கோழிக்குஞ்சுகள் ஏழு இல்லை! பதினாறு இல்லை!! ஏழு பையன்கள், மயிலினையொத்த மாரியா எல்லாமே நினைவுக்கு வந்தன. கண்ணீர் வழிந்தோடியது தலை கவிழ்ந்தான் பிண்டோ.

"சீக்கிரம் சொல்லிவிடு" என்றான் மார்க்காஸ் பக்கத்தில் வரும்படி பிண்டோ அழைத்தான் மார்க்காஸ் அவனுக்கு முன்னால் வந்து உட்கார்ந்தான் "சபாஷ்! சீக்கிரம் சொல்லிவிடு. நான் அவசரமாய் போகவேண்டும். மார்ஷல் பிராங்கோவிடமிருந்து தங்கப் பதக்கம் வாங்கித்தருவேன் அவர் நேரில் உன்னுடன் கை குலுக்குவார்." மார்காஸ் ஆசை காட்டினான்.

பிண்டோ அவனுடையமுகத்தில் காரி உமிழ்ந்து விட்டான். ஆத்திரங்கொண்ட மார்க்காஸ் ஈவிரக்கமின்றி பூட்ஸ் காலால் மாறி மாறி உதைத்தான். பிண்டோவின் முகத்திலிருந்து ரத்தம் பீறிட்டு ஓடியது. ஊன்முகமும் லாடம் தைத்த ராணுவ பூட்ஸும்.........!

"சீக்கிரமாக மண்ணைத் தள்ளி மூடுங்கள், உடனே மாஸ்கோ போகட்டும்"

சிப்பாய்கள் மண்ணைத் தள்ளினார்கள். பிண்டோ கழுத்து வரையில் புதைந்தான், மார்க்காஸ் மனதில் ஒரு புதிய யோசனை உதித்தது. சிரித்தான்.

"நிறுத்துங்கள், வேசி மகன்களை உயிருடன் புதைப்பதில் ஒரு புதிய முறையைக் கையாள்வோம். அவனுடைய ஒரு கையை வெளியில் எடுத்துவிட்டு அவனைப் புதைத்துவிடுங்கள். சவக்குழிக்கு வெளியே அவனுடைய கை நீட்டிக்கொண்டிருக்கட்டும். ஜனங்களுக்கு அது ஒரு படிப்பினையாக இருக்கும்" மார்க்காஸ் உத்திரவிட்டான்.

பிண்டோ உயிருடன் புதைக்கப்பட்டான். வெளியே நீட்டிக்கொண்டிருந்த அவனுடைய கை சிறிது நேரம் நடுங்கி பிறகு ஓய்ந்துவிட்டது. மார்க்காஸ் கொலம்பஸ் ஹோட்டலில் தனக்காகக் காத்துக்கொண்டிருந்த காதலியைச் சந்திக்கச் சென்றுவிட்டான்

அத்தி மரத்தடியில் புதிய சமாதியை ஆயிரக்கணக்கான ஜனங்கள் மாலையில் பார்த்தனர். அதன் நடுவே வாலிபக்கையொன்று நீட்டிக்கொண்டிருந்தது, அழகிய செடியைப்போல. முறியடிக்கப்பட முடியாத உறுதிக்கு எடுத்துக்காட்டாக; வளைந்து கொடுக்காத கல்தூண்போல அந்தக்கை நிமிர்ந்திருந்தது. பழுத்த அத்திப்பழம்போல் இறுக மூடப்பட்டிருந்த முஷ்டிக்கு அத்திக்கிளைகள் நிழல் கொடுத்துதவின. பச்சை நிறதழைகளுக்கு நடுவே பழுத்து சிவந்திருந்த அத்திப்பழங்கள் சிரிப்பதுபோல் காட்சியளித்தன.

Printed by V JAYARAM at his Sri Rama Printing Works, 129, E. Kadalangudi St., Kumbakonam.
Edited and published by MOULANA ABDUL HAKEEM, 13, K South, Kumbakom.